ஓம் வரத காளி அம்மையே துணை



யாழ்/சரவணை மேல்பால் மேவும் ஸ்ரீ அருள்வரத காளி அம்பாள் ஆலய

# "அன்னை அருள்மலர்"

11.12.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் வரதகாளி அம்மையே துணை



யாழ். சரவணை மேல்பால் மேவும்

ஸ்ரீ அருள்வரத காளி அம்பாள் ஆலய

# "அன்னை அருள்மலர்"

11.12.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் காசிலிங்கேஸ்வராய நம;'
'ஹரி ஓம் நாராயணாய நம;'



குரு வணக்கம்

அளவையூர் 'கவியோகி,

அருட்கவி கலாநிதி சீ. விநாசித்தம்பி(M.A) புலவர்

("நாகேஸ்வரம்" நாராயணர் தேவஸ்தானம்) அவர்களின்

பாதார விந்தங்களுக்கு

எனது குருவணக்கத்தை செலுத்துகின்றேன்

லாயல் ஐ.கோ. சந்திரசேகரன் (ஜெமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம!
உ



# காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன்

பத்துவிரல் மோதிரம் எத்தனைப் பிரகாசமது
பாடகம் தண்டை கொலுசும், பச்சை வைடூரிய
மிச்சையா மிழைத்திட்ட பாதச் சிலம்பினொளியும்
முத்து மூக்குத்தியும், ரத்தினப் பதக்கமும், மோஹன
மாலையழகும், முழுதும் வைடூரியம்
புஸ்பராகத்தினால்
முடிந்திட்ட தாலியழகும், சுத்தமாயிருக்கின்ற
காதினிற் கம்மலுஞ் செங்கையிற்பொன் கங்கணம்
செகமெலாம் விலைபெற்ற முகமெலா வொளிவுற்ற
சிறுகாது கொப்பினழகும், அத்திவரதன்றங்கை
சத்திசிவ ரூபத்தை யடியனாற் சொல்லத்திறமோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாக்ஷ்சி உமையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாயவன் தங்கை நீ! மரகதவல்லி நீ! மணி மந்திரகாளி நீயே!
மாய சொரூபி நீ! மகேஸ்வரியும் நீ!
மலையரசன் மகளானாய் நீ! மீனாட்சியானாய் நீ! தாயே!!
சற்குணவல்லி நீ! தயாநிதி விசாலாட்சி நீ!
தரணியில் பெயர் பெற்ற பெரிய நாயகியும் நீ!
சரவணனை ஈன்றவளும் நீ! ஆதிமகமாயி நீ!
ஆனந்த வல்லி நீ! அகிலாண்டேஸ்வரி நீயே அம்மா!
மாசி மகத்தினிலே அருளாட்சி செய்ய வலம்புரி சங்கில் வந்து
அடியாருக் கருளும் மனோன்மணி! மங்கள சொரூபினியும் நீயே!
சண்முகப்பிரியன் தாயே! பாதமலர் போற்றுகின்றேன் அம்மா!
உன் கடைக்கண் பார்வையால் துன்பமில்லா வாழ்வு தந்து
எம்மைக் காத்திட அருளாட்சி செய்திடம்மா!

"சர்ணாகத தீனார்த்த பரித்ராண பராயணே!!
ஸர்வஸ்யார்த்திஹரே! தேவி! நாராயணி! நமோஸ்துதே!!
(தன்னைச் சரணடைந்த தீனர்களையும், துன்புற்றோரையும் நன்கு
காப்பாற்றுவதிலேயே மிகுந்த ஈடுபாடு உடையவளே!.
அனைவரினதும் துன்பங்களையும் முற்றாக
நீக்குபவளே! தேவியே (ஒளிமயமானவளே)!
நாராயணியே
(திருமாலின் அம்சமாக விளங்குபவளே! தேவீருக்கு வணக்கம்!)

(தேவி மஹாகமியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்
ஆதீனமுதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** **நல்லூர், யாழ்ப்பாணம்,**

## அருளாசிச்செய்தி

அன்புடையீர்!



சரவணைப்பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் வரதகாளி அம்பாளுக்கு அருள்வாசகம் எனும் நூல் வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். வரலாறுகள் அழிந்து வரும் இக் காலத்தில் அனைத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்மவரை சார்ந்ததாகும்.

இவ் நிலையில் இவ் ஆலயத்தினுடைய வரலாறை பாடல்களாகவும், கவிதை களாகவும், கட்டுரைகளாகவும் இந்நாட்டில் வாழ்கின்ற அருட்கவி எனப் பட்ட அமரர் விநாசித்தம்பி அவர்களினால் அருநிலை நின்று வழிப்படுத்திய செய்திகள் அனைத்தையும் நூல் வடிவில் கொண்டு வரும் தர்மகர்த்தா சபையினரை வாழ்த்துகின்றோம். வேண்டுவார் வேண்டுவதை, ஈய்யும் பொருட்டு இவ்வாலயத்தை உலகத்திற்கு தாயாக விளங்கும் அன்னை காளியம்பாளாக எழுந்தருளி உள்ளாள். அன்னையின் அன்பையும், அருளையும் அளந்து விட முடியாதளவுக்கு அருள் நிறைந்தவளாக இருக்கின்றாள். அன்னையின் வழிபாடு இம்மைக்கும், மறுமைக்கும் பேரின்பத்தை தருவதாகும். இதனை வெளிப்படுத்தும் நோக்கமாக வெளிவரும் அன்னைபூரணியருள் மலர் அனைவருக்கும் பயனுள்ளதாகவும் அம்பிகையினுடைய அருளைத் தருவதாக அமைய இறைவனை பிரார்த்திக் கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானகுரு கவியோகி

அருட்கவி கலாநிதி சீ. விநாசிததம்பி (M.A) அவர்களால் வழங்கப்பட்ட

## ஆசிச்செய்தி



சிவம்பொங்கு யாழ்ப்பாணத்தில்
திகழ்சர வணையூர் மேல்பால்
அவனிக்கோர் அன்னையாகி
அருள்வரத காளியம்மை
பவம்பொங்கு வினைகள் நீக்கிப்
பக்தர்க்கு வரங்கள் நல்கி
தவம்பொங்கு நெறிகள்காட்டி
தனிக் கோயில் கொண்டமர்ந்தாள்

அன்னையருள் மலர்பேர் சூட்டி
அன்பர்கள் வெளியீடாக்கும்
பொன்னிகர் புனித நன்னூல்
புகுந்தோது வார்க்கினித்த
கன்னலாய் ஞானம் நல்கும்
கதிரவன் போலவாழி
மன்னுமிப் பணிசெய்வோர் நல்
மாமேரு போல வாழி

அன்புத்தாயாக நிற்கும்
அருள்வரத காளியம்மை
பொன்பொலி பாதம் வாழி
போற்றிடும் அடியார் வாழி
மன்பதைக் கினிய செல்வ
வளநலம் செழித்துவாழி
இன்பமுத் தமிழும்வாழி
இசைச்சைவம் வாழி வாழி

கவியோகி
அருட்கவி சீ. விநாசித்தம்பி *M.A*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



"சிவாச்சார்யகுருமணி"
**சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள்**
அத்தியடி பிள்ளையார் கோவில்
யாழ்ப்பாணம்,
இலங்கை.

அருள்மிகு முருகமூர்த்தி கோவில்
பள்ளம்புலம்
வேலணை.

"Shivachchariyakurumani"
Siva Sri N. Yogeswarakurukkal
Athiyadi Pillaiyar Kovil
Jaffna.
Sri Lanka.

ArulMeku Murukamoorthy Kovil
Pallampulam
Velanai.



.......200....

---

### ஆலய பிரதமகுரு அவர்களால் வழங்கப்பட்ட

# "அருளாசிச் செய்தி"



"நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்
தேடித் திரிந்து சிவனென்றுபாடுமின்"

என்பது திருமந்திர வாக்கு ஊர்கள் தோறும் ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்வதன் மூலம் இறைசக்தி ஆலயத்தில் பெருகுகின்ற சிறப்பை நாம் உணரலாம். ஆலயங்களில் காணப்படும் திருவுருவங்கள் அருட் சின்னமாக விளங்கு பவையாகும்.

அபிஷேகம் ஆராதனை விழாக்கள் முதலிய வழிபாடுகள் காரணமாக இத்திருவுருவங்களில் இறைவனின் பேரருளுடைமை என்னும் குணம் மேலோங்கி நிற்கிறது.

அந்த வகையில் ஊர்காவற்றுறை சரவணை என்னும் பதியில் வரதகாளி அம்பாள் கோயில் முன்னோர்களால் வழிபாடுகள் ஆராதனைகள் நடைபெற்று யுத்த சூழ்நிலை காரணமாக வழிபாடுகள் நடைபெறாமலும் இருப்பதை அடியார்கள் பார்த்து மீண்டும் திருத்தவேலைகள் செய்து வர்ண வேலைகள் செய்தும் சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் உத்தரட்டாதி நக்ஷத்திரத்தில் புது அழகுடன் அருள் பொலிவு செய்து கும்பாபிஷேகப் பெருவிழா கண்டுள்ளது. இக் கும்பாபிஷேகப் பலனால் ஆலய பரிபாலகர்களும் அடியார்களும் பேரருள்பெற்று சிறப்பாக வாழ வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"

**ஆலய பிரதமகுரு சிவாச்சார்யமணி**
**சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

## சரவணை வரதகாளி அம்பாள் ஆலய குருவின்
# ஆசிச்செய்தி



அருவமாய் உள்ள இறைவன் உயிர்களின் நலன் கருதி எடுத்துக் கொண்ட உருவமே சக்தியின் வடிவமாகும். இதனை ஆதிசக்தி என்றும் கூறுவர் முக்குணங் களையும் கொண்டு சரஸ்வதியையும் மகா லட்சுமியையும் மகாகாளியையும் சிருஷ்டித்தார். இவர் களில் காளிஅம்பாளின் வழிபாடு முறை கிராமப் புறங்களில் தலை சிறந்து விளங்குகிறது சரவணை வரதகாளி அம்பாளின் ஆலயம் சிறு ஆலயமாக இருந்து பெரிய ஆலயமாக வளர்ச்சி பெற்று விளங்குகிறது இவ் ஆலயத்தில் கும்பாபிஷேகதினம் வைகாசிப்பொங்கல், ஆடிப்பூரம், நவராத்திரி, கேதாரகௌரி விரதமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வரதகாளி அம்பாளின் அருளைப் பெற்றவர்கள் பலர், அவர்களில் அன்னையின் அருள் பெற்ற திரு. ஐ.கோ.சந்திரசேகரன்(JP) அவர்கள் அன்னை அருள் மலர் என்னும் நூலை வெளியிடுவதை முன்னிட்டும், காளி அம்பாளின் பணி தொடர அவருக்கு காளி அம்பாளின் அருளும், எனது ஆசிகளும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**சரவணை வரதகாளி அம்பாள் ஆலய குரு**
**சிவஸ்ரீ ந. கணேசராசக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
பேராசிரியர் எஸ். மோகனதாஸ் அவர்கள் வழங்கியுள்ள

# வாழ்த்துரை

இறைவனைப் பல்வேறு பெயர்களினாலேயே பக்தியுடன் போற்றி வழிபடும் மரபு சைவசமயத்திலே நீண்ட காலமாக நிலவி வருகின்றது. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை உலகனைத்தினதும் தந்தையாகவும் அவரின் திருவருட்சக்தியாகிய அம்பாளை உலகனைத்தும் தாயாகவும் பக்தர்கள் வழிபடுவர். இச்சக்தி பார்வதி, பராசக்தி, மீனாக்ஷி, காமாக்ஷி, காளி, ராஜராஜேஸ்வரி லலிதாம்பிகா எனப்பல பெயர்களினாலே போற்றி வழிபடப்படுகிறாள்.

இவ்வகையில் உலக அன்னையாக இயங்கும் காளியம்பாளுக்குரிய ஆலயங்கள்பல யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதனையடுத்துள்ள தீவுகளிலும் உள்ளன. இவ்றுள்ளே பிரபல்யமான ஆலயங்களிலொன்றாக வேலணை (லைடன் தீவினை)ச் சேர்ந்த சரவணையிலுள்ள ஸ்ரீ அருள்வரதகாளி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. காளி அம்பாள், பத்திரகாளி (நன்மை செய்யும் காளி), வரதகாளி (அன்பர்கள் வேண்டும் வரங்களைத் தருபவள்) எனவும் போற்றப்படுகின்றாள். காளி என்றவுடன் ஒருசாராருக்குப் பயம் ஏற்படுவது உண்டு. ஆனால் உலக அன்னையாக விளங்கும் அம்பாள் தன்னுடைய பிள்ளைகளாகிய ஆன்மாக்களுக்கு என்றும் நன்மையே செய்வாள்.தீமை செய்யாள், அதே வேளையில் ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் மலங்களையும், எதிராக உள்ள தீய சக்திகளையும் அடக்குவதற்கு மட்டுமே உக்கிரமான வடிவம் தாங்குவாள்.

சைவமும் தமிழும் நன்கு நிலவும் சரவணையிலே கோயில் கொண்டெழுந்தளியிருக்கும் அருள் வரதகாளி அனைவருக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். அம்பாளின் பேரருட் சிறப்புக்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையையும் பற்றி அவரின் அருள் பெற்றோர் இயற்றியுள்ள அம்பாளின் அருட்பிரவாகம், ஊஞ்சல் பதிகங்கள், பேரின்பக்காதல், பஜனைப் பாடல்கள், போற்றி அகவல், தேவியின் தோத்திரங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய அன்னைமலர் எனும் தொகுப்பினை அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் வெளியிட்டுள்ளனர். இவர்களின் இம்முயற்சி நன்கு பாராட்டற்குரியது. இன்றைய கலியுகத்தில் இறைவனை, இறைவியை வழிபடுதற்குத் தோத்திரங்களும், பக்திமார்க்கமும் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவரும் மக்களுக்கு இத்தகைய சமய, ஆன்மீகச் செயற்பாடுகள் நிம்மதியையும், அமைதியையும் அளித்து வந்துள்ளன. எனவே காலத்தின் தேவைக்கேற்பவும் ஆலய தர்மகர்த்தா சபையினர் செயற்பட்டு வருவது குறிப்பிடற்பாலது

ஆலயங்களிலே கிரியைகள் மட்டுமன்றிப் பக்திப் பாடல்களும், தல விசேடங்களைக் கூறும் அருட்பாடல்களும் நன்கு இடம்பெறுதல் மூலமே மக்களுக்கும், ஆலயத்திற்குமிடையிலே நெருங்கிய பிணைப்பு ஏற்படும். இவ்வகையிலே தர்மகர்த்தா சபையினர் ஒரு முன்மாதிரியான செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூற விரும்புகிறேன். அவர்கள் மேலும் இப் பெயர்ப்பட்ட தெய்வீக செயற்பாடுகளிலும் மற்றும் சமூக சேவையிலும் ஈடுபட அம்பாளின் திருவருள் அவர்களுக்குக் கிட்டுவதாக. அம்பாளின் திருவருளால் அவ்வூர் மக்கள் மட்டுமன்றி இலங்கையிலே வாழுகின்ற சைவ மக்கள் அனைவரும், ஏனையோரும் சமாதானம், சுபீட்சத்துடன் வாழ்வார்களாக.

**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் (M.A) அவர்களோடு
லயன் ஐ.கோ. சந்திரசேகரன் (ஜேபி) அவர்கள்
அளவெட்டி நாகவரத நாராயணன் தேவஸ்தான
மனோன்மணி அம்பாளின் வாசல்முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# "ஒளிரும் ஒளிக்கிடமே அருள்வரதகாளியம்மை"



"நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்" என்று அப்பர் சுவாமி பாடுகிறார். அ, உ, ம் என்ற 3 எழுத்துக்கள் ஓம் என்ற பிரணவமாய் ஒலிக்கின்றன. அகிலாண்ட நாயகி புவியடங் காத்தவளாகிய அம்பிகை "உ" எழுத்துக்குரியவள், "அ" படைத்தல், "உ" காத்தல், "ம்" அழித்தல் எனப் பொருள்படும்.

உயிர் காத்தல் தொழிலையே விசேடமாகக் கொண்டதாய் உம்அ என்ற ஓங்காரப் பெயருடன் விளங்குகிறாள். "உமா–ஓம்."

திருக்கைலாயத்திலே நள்ளிருட் குகையிலே கோடி சூரியப்பிரகாசமாக எம்பெருமான் வீற்றிருக்கின்றார். அந்த பிரகாசத்துடன் நீங்கா நீல நாயகியாக அவர் அருகில் எம்பெருமாட்டி வீற்றிருக்கின்றாள். உமையவள் செயற் பாட்டிற்கு அமைய சகல வடிவிலும் காட்சி தருகிறாள்.

யார் எத்தெய்வத்தை கும்பிட்டாலும் அந்த வழிபாடுகள் எல்லாம் உமையாகவும் சிவனாகவும் காட்சி தருகின்ற அந்த பரப்பிரமத்தையே குறிக்கின்றது. "கவுனியர்க்கு பால் சுரந்த கலசம்" அவளது திருக்கரத்தில் காணலாம். அந்தகலசம் தம்மடியார்க்கு வேண்டிய வரங்கொடுத்துப் பசி தீர்க்கும் கலசம். என்ன வேண்டினும் தம் மக்களுக்கு உதவும் தாயாக, எம்மை இயக்குபவளாக. வழிப்படுத்துபவளாக, "புன்னெறி போக்கி நன்னெறி" காட்டுபவளாக, நல்லறிவைத் தரும் ஞானம்பிகையாக, இறைவன் பாகத்தில் இருக்கும் சோதிப்பிழம்பாக, அந்தப் பெருமாட்டி வீற்றிருக்கிறாள். எம்பெருமாட்டி அசையும் அசைவே அவளது காட்சிகள். அவளது சிலம்பொழியே நாதங்கள். அவளது திருக்கடைக்கண் அருளே நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள். அந்த உமாதேவியின் செயலாலேயே பஞ்ச பூதங்கள் அசைகின்றன. அந்த பூதநாயகி, எம்மைப் பஞ்ச பூதங்களாலே (உடம்பை) ஆக்கியுள்ளாள். "பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதீயும் படைத்து புனிதரும் நீயுமென் புந்தி எந்நாளும் பொருந்துகவே" என்பார் அபிராமிப்பட்டர். பஞ்ச சக்திகளில் ஒன்றாகிய கணேச ஜனனி எனும் துர்க்கை என்பவள் பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்பவள், சர்வசித்தி கொடுப்பவள், சரணடைந்தாரைக் காப்பவள், சர்வ சக்திகளுக்கும் ஈஸ்வரி பரமாத்மாவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஸ்ண ரூபிணி. அப்படியாகிய துர்க்கையின் முகத்தில் உதித்தவள் வரத காளியம்மை சும்பன், நிசும்பனைச் சங்கரிக்க வந்தவள். சர்வாண்ட கோடிகளையும் கணத்தில் அழிக்கும் ஆற்றல் படைத்தவள். தர்மார்த்தா பூசைகளால் போற்றப்படுபவள். அண்ட பிண்ட சராசரங்கள் அத்தனையும் அவளுடைய திருவடியின் கீழ் கொண்டுள்ளாள்.

**" அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி**
**ஆதியும் அந்தமில்லாத வேதமுதல்வி அந்த வித்தகி**
**இம்மைக்கும் மறுமைக்கும் இன்னருள்**
**சுரக்கும் இறைவி அந்த தலைவி"**

ஆன்மீக வளத்தோடு எம் தாயை வணங்கி அருள் ஞான ஒளியை பெற்று உய்ய வேண்டும். ஒளிக்கு ஒளிக்கிடமாக இருக்கும் அன்னை வரதகாளியம்மையை அனுதினம் துதிப்போமானால், மனதில் நினைப் போமானால், அழியா அரசும், தவநெறியும் சிவலோகமும் என்றும் சித்திக்கும் என்பது தெளிந்த நிலவு போல் உள்ளது. மீண்டும் "கவுனியர்க்கு பால் சுரந்த கலசம் போற்றி" என்ற வரிகளின் ஊடாக எம் பெருமாட்டியின் பேரருள் எங்குமே பரவ வேண்டும். அடியார் கூட்டம் பெருக வேண்டும். ஆலயம் முப்பரிமாண வளர்ச்சிபெற வேண்டும். அவ்வின்னருளின் ஒளியை பெற்று யாமும் சாந்தி பெற வேண்டும்.

**"பொன் பெருகுதிரு ஆலங்காட்டிலடி**
**பொருந்து முனிவர்க்கு நலம் புரிந்தாய் போற்றி**
**இன்ப நிழல் வேம்பின் கீழ் கோயில் கொண்ட ஈஸ்வரியே**
**விஸ்வகர்ம குலவிளக்கே துன்ப வினை**
**தீர்க்கவந்த சோதித் தாயே**
**சூலபாச கலசங்கள் ஏந்தி**
**அன்பர் தொழும் சரவணை மேல் மேவும்**
**அருள்வரத காளியம்மை போற்றி போற்றி**

**லயன் ஐ.கோ. சந்திரசேகரன்**
**(அகில இலங்கைசமாதான நீதவான்), தலைவர்**
**ஸ்ரீஅருள் வரதகாளியம்பாள் தேவஸ்தானம்**
**சரவணை மேற்கு - 2, வேலணை.**

**பிரதம ஒழுக்காற்று அதிகாரி**
**யாழ். பல்கலைக்கழகம்.**
*Chief Marshal*
*University of Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் அருட் கோலங்கள்

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**

**வாழ்நாட் பேராசிரியர்**

**முன்னாள் கலைப்பீடாதிபதி - யாழ் பல்கலைக்கழகம்**

யாதுமாகி நின்றாய் – காளி
எங்கு நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் – காளி
தெய்வலீலை யன்றோ?
பூத மைந்து மானாய் – காளி
பொறிக ளைந்து மானாய்
போதமாகி நின்றாய் – காளி
பொறியை விஞ்சி நின்றாய்

காளியின் மகத்துவத்தை மகாகவிபாரதியின் காளிப்பாட்டு இவ்வாறு போற்றுகின்றது. அம்பிகையின் அருளாற்றலில் வடிவங்களாகிய அற்புதக் கோலங்கள்அனந்தம். இவ்வுலகில் நிகரற்ற அன்னையின் இயல்பினைத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் மரபிலே வளர்ந்தது அம்பிகை வழிபாடு. தாய்த்தன்மை மனிதரிடத்தே மிக உன்னதமாக விளங்குகின்ற காரணத்தால் இறைவனைத் தாயாககொண்டு வழிபடும் மரபு மேலோங்கியுள்ளது. தாய்க்கும், பிள்ளைக்கும் இடையே காணப்படும் ஒப்பற்ற அன்பு உன்னதமானது. உலகில் வேறெதுவும் அதற்கு ஈடாகாது. தந்தையிடத்தில் குழந்தை அதித உறவு கொள்வதில்லை. ஆனால் தாய்ப்பாசத்தினால் குழந்தை தாயின் அரவணைப்பில் திளைக்கின்றது. நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் செல்வத்திலும் வறுமையிலும் தாயன்பு என்றும் மாறாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தான் அருளை அள்ளிச் சொரியும் இறைவன் தந்தையாக மட்டுமன்றித் தாயாகவும் போற்றப்படுகின்றார். "கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்கென்று இரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே" எனத் தாயுமானவர் வேண்டுகின்றார். எனவே அன்பின் உயர் நிலையில் பக்தியின் உச்சத்தில் இறைவன் தாயாகவே எமக்குக் காட்சி தருகின்றான். "பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து நீ..." என்பார் மாணிக்க வாசகர்.

எமது சமய மரபில் இறைவனையும் இறைவியையும் இப் பிரபஞ்சத்தின் பெற்றோராக வழிபடும் சிறப்பு உள்ளது. "அம்மையே அப்பா ஒப்பிலாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" என்ற திருவாசக வரிகள் இதற்குச் சான்று. காளிதாசர் தமது இரகுவம்ச மகாகாவியத்தில் கடவுள் வழிபாட்டில் பார்வதி பரமேஸ்வரரை இவ்வுலகின் தாய் தந்தையராகப் போற்றுகின்றார்.

வாகர்த்தாவிவ ஸம்பிருக்தெள வாகர்த்த பிரதிபத்தயே!
ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேஸ்வரௌ!!

பார்வதியும் பரமேஸ்வரனும் உலகத்திற்கு தாய் தந்தையர், சொல்லும் அதன் பொருளும் சேர்ந்திருப்பது போன்று அவ்விருவரும் சேர்ந்து இருந்து பக்தர்களுக்கு அருள்புரிவதில் ஒரே மனம் கொண்ட திவ்ய தம்பதிகள் எனப் போற்றப்படுகின்றனர்.

சிவம்வேறு, சக்திவேறு அன்று இரண்டும் இணைந்த சிவசக்தி அம்சமே எமக்கு உயிர்த்துணையாக அமைகின்றமை குறிப்பிடற்பாலது. சிவம் என்பது மெய்ப்பொருள். எக்காலத்தும் மாறாத அழிவற்ற தன்மையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடத்தில் என்றும் பிரியாது நிலைத்துள்ள அம்சத்திற்குச் சக்தி என்று பெயர் என அருளாளர் விளக்குவர். பாலினின்று வெண்மையைப் பிரிக்க முடியாதவாறு சிவத்திலிருந்து சக்தியைப் பிரிக்க முடியாது. எனவே தான் சிவாலயங்கள் தோறும் எழுந்தருளி அருள் சுரக்கும் எம்பெருமானைச் சுட்டும் போது சக்தியுடன் இணைத்துக் கூறும் மரபு இருந்து வருகின்றது எடுத்துக் காட்டாக, ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன், ஸ்ரீ விசாலாட்சி சமேத விசுவநாதர், ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாதர், ஸ்ரீ வடிவாம்பிகாதேவி சமேத முன்னைநாதர், ஸ்ரீ மீனாட்சி சமேத சுந்தரேசுவரர், என்ற நாமங்களில் சக்தியின் சிறப்பையும் சிவத்தின் மாண்பையும் நாம் விளங்கிக் கொள்ளலாம். உமாமகேசுவரன், லக்ஷ்மீநாராயணன் ஆகிய திருநாமங்களும் இத் தத்துவத் தையே உணர்த்துகின்றன.

அண்டங்கள் அனைத்தும் சிவசக்தி மயமாகவே இருக்கின்றன. இயற்கையில் எதிலும் இத்தத்துவமே பிரதி பலிக்கின்றது. காற்று வீசுகின்றது; மழை பொழிகின்றது; பூமி சுழல்கின்றது; அண்டங்கள் இயங்குகின்றன; சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் அண்ட வெளியில் ஒழுங்காக விளங்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன; உயிரினங்கள் தோன்றி மறைகின்றன. இத்தகைய இயற்கைச் செயற்பாடுகளில் சக்தியின் மூலத்தினையும் சிவத்தின் ஆற்றலையும் நாம் உணர முடிகின்றது. எனவே எமது சமய மரபில் இறை சக்தி பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைத்திருக்கின்றமை காலந் தோறும் உணரப்பட்டு வருகின்றது.

எமது சமய மரபில் சக்தியின் பிரபாவத்தைப் பல நூல்கள் போற்றித் துதிக்கின்றன. உயிரைப் பிறப்பிக்கும் சக்தி தாய்க்கு இருப்பது போல இவ்வுலக உயிரினங்களின் அன்னையாக அம்பிகை போற்றப்படுகின்றாள். தேவீமாகாத்மியம் அம்பிகையைச் சிறப்பாக இவ்வுலகில் உள்ள உயிரினங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தினதும் தாயாகப் போற்றுகின்றது.

யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ் தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம;

என்ற பாடல்

தாய்மைப் பண்பைத் தெளிவாகக் கூறுகின்றது. அதே போன்று ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் அம்பிகையைத் தொடக்கத்திலேயே "ஸ்ரீமாதா" என விளிக்கின்றது. அத்துடன் அம்பிகையே அனைத்தினதும் சக்தியாக விளங்குபவள் எனவும் கூறும். எனவே அம்பிகையை வழிபடும்போது அவளது பேராற்றலையும் தாயன்பையும் உள்ளபடி நாம் உணர்ந்து அநுபவிக்க முடிகின்றது. இறைதத்துவத்தை உணர்த்துவதற்கு மனதை ஒருமுகப்படுத்துவது இன்றியமையாதது. மனதை ஒருமுகப்படுத்த சக்தி வழிபாடும், உபாசனையும் பெரிதும் கைகொடுத்து உதவக் கூடியவை.

அம்பிகையை பல்வேறு நிலைகளில் வழிபாடு செய்யக் கூடிய வாய்ப்பு எமது சமய மரபில் உள்ளது. அம்பிகைக்குரிய ஜகன்மாதா, ஜகத்ஜனனீ, ஆதிபராசக்தி, ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரி, மீனாட்சி, விசாலாட்சி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, மகாமாயி, மகாகாளி, பத்ரகாளி, மகிஷாசுரமர்த்தனி, துர்க்கை, மகாலட்சுமி, சரஸ்வதி, காமாட்சி போன்ற நாமங்கள் அவளது அருளாற்றலை விளக்குவன. இத்திருநாமங்களில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு ஊர்தோறும் ஆலயங்கள் எழுப்பப்பட்டு வழிபாடுகள் நடந்தேறி வருகின்றன. எவரெவர் அம்பிகையிடமிருந்து எவ்வெவற்றைப்பெற விரும்புகின்றனரோ அதற்கேற்ற தேவியம்சத்தை பக்தியுணர்வுடன் போற்றி வழிபடுகின்றனர். ஈஸ்வரனது சக்தியாக விளங்கும் துர்க்கையை கால சொரூபிணியாகத் தியானிக்கும்போது அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியாகின்றாள். நவராத்திரி காலத்தில் அம்பிகை, துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதியாகத் தியானிக்கப்படுகின்றாள். வீரம், செல்வம், கல்வி ஆகிய நன்மைகள் இவளது வழிபாட்டினால் கிடைக்கும் பயன்கள். அம்பிகை துர்க்கா தேவியாக விளங்குமிடத்து இப்பிரபஞ்சத்தில் அவள் செலுத்தும் ஆணையை மீறி எவரும் செல்ல முடியாது. எம்மிடத்தேயுள்ள ஆணவம் மற்றும் அகங்கார மமகாரங்கள் ஒழிய துர்க்கையின் திருவருள் துணை செய்கின்றது. நாம் மனிதர்களாக மனிதப் பண்புடன் வாழ துர்க்கா வழிபாடு வழியமைக்கின்றது. மனிதனாக வாழ்கின்ற ஒருவன் ஏதோ காரணங்களால் தன்வசம் இழந்து ஆணவ வசமாகி செயற்பட ஆரம்பிக்கின்றான். இத்தகைய நிலையில் அம் மனிதன் தன்னிலை கெடுவதோடு மாத்திரமன்றி ஏனையோரது அமைதி வாழ்வையும் சீர்குலைக்க முயலவ்தையும் நாம் எமது வாழ்நாளில் சந்திக்கின்றோம். இத்தகையரோது குறைகளைக் களைந்து நேர்வழியில் கொண்டு வருவதற்கு சக்தியை எமது சமயமரபில் துர்க்கையாகப் போற்றுகின்றோம். அம்பிகையின் மகிசாசுர மர்த்தினி வடிவம் இத்தத்துவத்தைக் கொண்டது. அறியாமையாகிய ஆணவ மலத்தை நீக்கி ஞானத்தைப் புகட்டுவதாக இவ்வடிவத்தின் தத்துவம் போற்றப்படுகின்றது. எனவே அவளது தர்ம நியதிக்கு நாம் அனைவரும் உட்பட்டவர்கள்.

சுவாமி சித்பவானந்தர் தமது "சக்திதத்துவம்" என்ற சிறுநூலில் சக்தியின் பெருமையை வியந்து கூறும் போது மும்மூர்த்திகளில் ஒருவராகிய மகாவிஸ்ணு அம்பிகை மீது பாடிய ஸ்தோத்திரத்தின் பொருளைக் குறிப்பிடுகின்றார்.

"தேவியாகிய உனக்கு நமஸ்காரம்! மூலப்பிரக் ருதியாகிய உனக்கு நமஸ்காரம்! சிருஸ்டி கர்த்திரியாகிய உனக்கு நமஸ்காரம்! கல்யாண குணங்களை உனக்கு நமஸ்காரம்! விரும்பியவைகள் அனைத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்றவளாகிய உனக்கு நமஸ்காரம்! சித்(அறிவு) விருத்தி ரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம்! சம்சார சாகரத்துக்குத் தோணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம்; பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துகின்றவளாகிய உனக்கு நமஸ்காரம்; புவனேசுவரியாகிய உனக்கு நமஸ்காரம், அனைத்துக்கும் தலைமை வகிக்கின்றவளாகிய உனக்கு நமஸ்காரம்; எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் இருக்கின்ற உனக்கு நமஸ்காரம், ஹிருதயத்தில் பிரகாசிக்கின்றவளாகிய உனக்கு நமஸ்காரம், ஹே அம்ப! இவ்வுலகமெல்லாம் உன்னிடத்து இருக்கின்றதென்பதும் என்னைப் போன்றவர்களது உற்பத்தியும் லயமும் உன்னிடத்திலேயே என்பதையும் உன் திருவடியில் கண்டேன். உன்பாதக்கமலத்தில் கண்ட காட்சியினாலே நீ அகண்டமான மகிமையையுடையவளாயும் சர்வப் பிரபஞ்ச சொரூபிணியாயும் இருக்கின்றாய் என்பதையும் நான் நன்றாய்த் தெரிந்து கொண்டேன். இது நிச்சயம், ஜீவகோடிகளின் நிமித்தம் சிருஷ்டி காலத்தில் பிரபஞ்சத்தை சத்–அசத் விசாரத்தோடு விஸ்தாரமாய்ப் படைக்கின்றாய். இந்திரியங்களுக்கு விஷயமாகின்ற நானாவித தத்துவ சொரூபிணியாய் எங்களுடைய சகானுபவ நிமித்தம் திருவுருவங் கொண்டு பிரகாசிக்கின்றாய், எந்த வஸ்துவையும் அடைவதற்கு உன்னைத் தவிர வேறோரிடமில்லை. நீயோ எல்லா வஸ்துவிலும் நிறைந்தவளாயிருக்கின்றாய். எந்த புத்திமானாலும் வியவகார தர்மத்தில் உன்னை விட்டு ஒன்றும் செய்ய முடியாது. ஹேதேவி! உன்னுடைய பிரபாவத்தினால் எல்லா உலகங்களையும் சந்தோஷிப்பிக்கின்றாய். உன்னுடைய ஒளியினாலே எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கின்றாய். கற்பாந்தரத்தில் நீ அழியாமலே இருக்கின்றாய். உனது அருளாலன்றி எந்த வித்துவானும் உன்னை அறிய வல்லவன் ஆகான்"

இப்பகுதி அம்பிகையின் அருளாற்றலைத் தெளிவுபடுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகில் அருளாளர்கள் சக்தி வழிபாட்டின் மூலம் பெற்ற பயன்கள் அனந்தமாகும். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், மகாகவி பாரதியார் காளியை வெகுவாகப் போற்றியுள்ளனர். பரமஹம்ஸர் காளியின் வரப்பிரசாதத்திற்கு உரியவரானார். சக்திபூஜையினால் சக்தி வலுக்கும். பராசக்திக்குரிய எண்ணற்ற நாமங்களுள் காளி என்ற நாமம் சிறப்புடையது. காளி வழிபாடு ஆகம மரபில் திருக்கோயில் வழிபாடாகவும் கிராமிய வழிபாடாகவும் எம்மிடையே நிலவி வருகின்றமை குறிப்பிடற்பாலது. கோடானுகோடி கற்பங்கள் அடங்கப் பெற்ற காலத்தையே அவள் எடுத்து விழுங்கித் தன்னகத்தே அடக்குகின்றமையால் அவள் வடமொழியில் காளீ என்றும் காளிகா என்றும் அழைக்கப்படுகின்றாள் என சமய அறிஞர் குறிப்பிடுவர். காளிகாதேவியின் நிறம் நீலம், இயற்கையில் எங்கும் பரந்து வியாபித்து இருக்கும் பொருள் நீல நிறமாக இருப்பது இயல்பு, பரந்த கடல் நீல நிறம், அண்டவெளி நீல நிறம், அன்னை பராசக்தி காளியாகிய வடிவில் நீலநிறம் உடையவளாக இருப்பது அவள் எங்கும் நிறைந்தவள் என்ற தத்துவத்தை விளக்குகின்றது. திக்குகள் அனைத்திலும் அவளது பிரசன்னம். எனவே திகம்பரி என்ற பெயரைப் பெறுகின்றாள். அவளது வடிவம் கோரமானது. ஜீவன்களை காலக்கிரமத்தில் தன்னத்தே எடுத்து அடக்கும் தத்துவததை இந்நிலை குறிக்கும். இந்நிலையில் எமது ஆணவத்தை சம்காரம் செய்யும் சம்ஹார வடிவினளாகத் திகழ்பவள். அவளது திருவிளையாடல் நிகழுமிடம் ஸ்மசானமாகும். காளி ஏந்தியுள்ள ஆயுதங்களில் வாள் முக்கியத்துவமுடையது. இவ்வுலகில் நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகம் விளைகின்றன. அவளது வாள் தீமையை அகற்ற ஓயாது செயப்பட்டுக் கொண்டிருக்கும். ஆணவ மேலீட்டினால் மனிதர் செய்யும் செயல்களை அவள் காலக்கிரமத்தில் ஒடுக்கி அழிப்பாள். அத்தகைய தீவினையாளன் இயற்கைத் தாயாகிய காளியின் தண்டனைக்கு ஆளாவான் என்ற தத்துவம் உணர்த்தப்படுகின்றது. உலகில் சுயநலப்பற்றும், பேராசையும், ஆணவத்தடிப்பும், வன்குணமும், பட்சபாதமும் இருக்கும் வரை காளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கோரக்காட்சி இருந்தே தீரும் என சுவாமி சித்பவானந்தர் குறிப்பிடுகின்றார். இதுவே துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் ஆகும். இயற்கையன்னையாகிய காளிகாதேவி இவ்வுலக நன்மைகளை நல்வழியில் பயன்படுத்துபவர்களுக்கு அவள் பரிவுடன் அபயமளிக்கின்றாள். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற உணர்வு அத்தகையோர்க்கு ஏற்படும் உயர் கதியாகிய சிவகதிக்கும் அவள் அருளே துணை! அவளது அபய வரத கரங்கள் இதனையே சுட்டுகின்றன. காளியை வழிபட மிகுந்த மன உறுதியும் வீரமும் தேவை. மரணமில்லாப் பெருவாழ்வு பெற அவளது வழிபாடு உதவும். தேவி பாகவதம் பத்ரா காளியின் திருவிளையாடல்களையும் ஆணவ வடிவங்களாகிய சும்பன், நிசும்பன், ரக்தபீஜன் ஆகிய அசுரர்களின் வதம் பற்றியும் சிறப்பாகக் கூறும். இருக்கு வேதம் முதல் அனைத்து சாஸ்திரங்களிலும் தேவிவழிபாடு போற்றப்படுகின்றது

ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் தேவியின் அருளாற்றலைச் சிறப்பித்துக் கூறும்.

சம்சாரபங்க நிர்மக்ன ஸமுத்தாரண பண்டிதாயை (880வது நாமம்) சம்சாரமாகிய சேற்றில் முழுகியவர்களைத் தூக்கிக் கரையேற்றி விடுவதில் திறமை வாய்ந்தவள் என்பது இதன்பொருள். எனவே அம்பிகையைச் சரணபுகுந்தால் சம்சாரசாகரத்திலிருந்து மீட்சி பெறும் அருளைப் பெறலாம். அத்துடன் அம்பிகை அனைவரது இதயத்தாமரையில் வீற்றிருப்பவள் என்பதை ஸ்ரீ லலிதா அஷ்டோத்தர சத நாமாவளியில் வரும்

ஸமஸ்த ஹ்ருதயாம்போஜ நிலையாயை நமோநம, என்ற மந்திரம் குறிப்பிடுகின்றது. அம்பிகை அடியார்களது அஞ்ஞானமாகிய இருளைப் போக்கி தீபம் போன்று விளங்குபவள். இத்தகைய நித்திய ஞானப்பேற்றினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற அம்பிகையின் மூலமந்திரத்தைக் கொண்டு இடம்பெறும் உபாசணை பெரிதும் உதவும். அம்பிகை அம்மந்திரத்தின் வடிவமாகவும் தன்னைச் சரணடைந்தவர்களது பாபங்களைப் போக்குபவளாகவும் விளங்குபவள். ஸ்ரீசக்கரத்தின் நடுவே விளங்கி அனைத்து நன்மைகளையும் ஜீவராசிகளுக்கு அள்ளி வழங்குபவள். எனவே அவள் அன்னை என்ற நிலையில் ஸ்ரீமாதாவாகப் போற்றப்படுகின்றாள். உலகெங்கும் பரவக் கூடிய புகழைத் தருபவள். இத்தகைய தெய்வீகச் சிறப்புமிக்க அம்பிகையின் அருட் பிரவாகங்கள் அடங்கிய அன்னையின் அருள்மலர் வெளியிடுவதனால் அடியார்களுக்கு அனைத்து பேறுகளும் கிட்டுவதாகுக!

காளிமீது நெஞ்சம் என்றும்
கலந்து நிற்க வேண்டும்,
வேளை யொத்த விறலும் – பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாளி யொத்த வலியும் – என்றும்
இன்ப நிற்கு மனமும்
வாழி யீதல் வேண்டும் – அன்னாய்
வாழ்க நின்றன் அருளே!

– காளி ஸ்தோத்திரம்– மகாகவி பாரதியார்

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். சரவணை மேல்பால் பதியுறையும்

# ஸ்ரீ அருள் வரத காளியம்மை தோத்திரம்

## ஸ்ரீ கணபதி

அற்புத வரதகாளி அன்னையோ டமர்ந்திருக்கும்
தற்பரா நினது பாதம் தந்தெங்கள் இடர்கள்நீக்கி
நற்பலன் அருள்வாய் போற்றி, ஞாலமெல்லாம் நிறைந்த
கற்பகக் களிறே ஞான கணேசனே போற்றி போற்றி

## காப்பு

ஐங்கரா சுந்தரா ஆனைமு கத்தனே
மங்கள சரவணை வரதகா ளியம்மை
பங்கயத் தாளிணை பாடிட வந்தருள்
துங்க மேவிய சுந்தரப் பாதமே

## யாழ். சரவணைப்பதி வரத காளியம்மை தோத்திரம்

1. வாரணன் தாயே கோடி மண்டலம் காக்கும்தாயே
நாரணம் தங்கை யாகி நல்வரம் கொடுக்கும் தாயே
காரணி மேனி கொண்டு காட்டிலே யாடுந்தாயே
ஆரணி வரதகாளி அன்னையே போற்றி போற்றி

2. தமிழ்மொழி வளர்ப்பதற்காய் தண்ணருள் மதுரைவந்தாய்
உமையென நின்றாய்தில்லை உயர்வீர காளியானாய்
நமதிடர் தீர்க்கவந்து நர்த்தனம் புரிந்தாய் அம்மா
அமுதமே வரத காளி அன்னையே போற்றி போற்றி

3. விரவிய கவலையாலே வேதனைப்பட்ட போதில்
இரவுடன் பகலோடென்னை ஏத்துவாய் என்று கூறிச்
சரவணைப்பதியின் மேற்கில் தனிக்கோயில் கொண்டாயம்மா
அரவணி வரதகாளி அன்னையே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சொற்பொருளாகி எங்கும் சோதியும் சுடருமாகி
கற்பகக் கையினாலே கனிந்திடும் வரங்கள் நல்கி
பற்பல வடிவிலெம்மைப் பதறாமல் காத்தாயம்மா
அற்புத வரதகாளி அன்னையே போற்றி போற்றி

5. வானுந்து தேவகோடி மனங்குலைந் தலையும்போது
தேனுந்து கடம்பவேலன் செருவிடும் வேளைவந்து
நானுந்து நிருதர்தம்மை நலிந்தனை சூலத்தாலே
ஆனந்த வரத காளி யன்னையே போற்றி போற்றி

6. பொருளுண்டு கலைநிறைந்த புகழுண்டு தெய்வசித்தித்
தெருளுண்டு வளங்களுண்டு செழித்தநீர் நிலங்களுண்டு
குருவுண்டு நினது பாதம் கும்பிடும் தொண்டருக்கே
அருளுண்டு வரத காளி அன்னையே போற்றி போற்றி.

7. பொறிபுலன் போன போக்கில் போகாத புனிதநெஞ்சும்
நெறிதவ றாத வாழ்வும் நினைவுமெய் வாக்கினாலே
செறிபழி பாவம் செய்யாச் செல்வமும் தருவாயம்மா
அறிவொளி வரத காளி அன்னையே போற்றி போற்றி

8. வெம்பவ நோயைத்தீர்ப்பாய் வெஞ்சினம் களவு கள்ளு
நம்பினர்தமைவஞ்சித்தல் நரகுறு கொலைபொய் சூதுப்
பம்பர நிலைகொள்ளாமல் பாதுகாத்திடுவாயம்மா
அம்பல வரதகாளி அன்னையே போற்றி போற்றி

9. அஞ்சிடு காலன்வந்தால் அடியேன்முன் னிற்பாயம்மா
நெஞ்சிலே கவலைவந்தால் நீ துணை புரிவாயம்மா
பஞ்சமும் பிணியும் வந்தால் படியளந் தணைப்பாயம்மா
அஞ்சன வரத காளி அன்னையே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. திருநீறும் ஐந்தெழுத்தும் சிவமணியும் புனைந்த
பெருமாத வர்கள் வாழ பெருகுதெய் வீகபூசை
தருநீதிச் சைவம் வாழத் தண்ணருள் சொரிவாயம்மா
அரியேறு வரத காளி யன்னையே போற்றி போற்றி

### ஸ்ரீமுருகன்

ஆதி வேலழகா போற்றி அணி சரவணையில் மேவும்
சோதியாம் வரதகாளி சுந்தர மகனே போற்றி
வேதத்தின் குருவே கந்த விஜயனே போற்றி, ஆறு
பூதரம் வீற்றிருக்கும் புண்ணியா போற்றி போற்றி

### ஸ்ரீ வைரவக் கடவுள்

நீல மேனியன் நெட்டிலைச் சூலத்தன்
ஞால நாயகன் நற்றவத் தோர்பணி
கோல மேனியன் குலவிடும் கஞ்சுகன்
கால பைரவர் கழலினை போற்றுவாம்.

பொன்பெருகு திருவாலங்காட்டி லாடிப்
பொருந்து முனிவர்க்கு நலம்புரிந்தாய் போற்றி
இன்பநிழல் வேம்பின்கீழ் கோயில் கொண்ட
ஈஸ்வரியே விஸ்வகர்ம குலவிளக்கே
துன்பவினைதீர்க்கவந்த சோதித்தாயே
சூலமொடு பாசகலசங்க ளேந்தி
அன்பர் தொழும் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மா போற்றி போற்றி.

சுபம்.

ஆக்கியோன்:
**அருட்கவி, சீ. விநாசித்தம்பி M.A**
"நாகேஸ்வரம்" ஸ்ரீ நாராயணன் தேவஸ்தானம்
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்கீர்த்தனை நூல் வெளியீடு செய்த போது
அருட்கவி கலாநிதி சீ. விநாசித்தம்பி புலவர் (ஜே.பி)
அவர்களோடு லயன் ஐ.கோ. சந்திரசேகரன் ஜே.பி



மணவாளக் கோல விழாவின் போது சிங்க வாகனத்தில்
காளி அம்பாள் வீதிஉலா வருதல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணை மேற்கு ஸ்ரீ வரதகாளியம்மை

## பேரின்பக் காதல்

அம்மா பராசக்தி அருள்வரத காளியம்மா
சிம்மா சனத்திருக்கும் செல்வியே வாருமம்மா
சிவனைப் பிரியாத தேவியே உமையவளே
தவமிருந்து தொண்டரது சஞ்சலங்கள் தீர்த்தவளே
ஐங்கரனை அறுமுகனை அணைத்துவரும் சுந்தரியே
செங்கையிற் சூலத்தால் தீயவரை அழிப்பவளே
சித்தத்தில் நினைவார்முன் செங்கமல முகங்காட்டி
முத்துச் சிரிப்புடனே முன்னிற்கும் நாரணியே
நினைக்கும் அடியார்கள் நினைக்கின்ற வடிவினிலே
நினைத்த வரங்கொடுக்கும் நிமலியே நிரஞ்சனியே
பொங்கலிட்டு பூசைசெயும் பொன்னடியார் முன்னிலையில்
மங்களப்பெண் வடிவாகி வந்துநிற்பாய் பூரணியே
பாடுவார் கூட்டத்திலே பாதச் சிலம்பசைத்து
சூடுமலர்ச் சடைகுலுக்கித் துரியநட மாடிடுவாய்
கிழவியாய் வந்திருந்து கேடின்றிக் காத்தவளே
பழமுதிரும் வேம்பின்கீழ் பாலகியாய் நின்றவளே
நம்பியுன் பாதமலர் நாள்மலரால் பூசித்தோம்
வெம்பிணிகள் வாராமல் விமலியே காத்திடம்மா
வயிற்றுப்பசியாலே மற்றவரை இரக்காமல்
உயிர்ப்பலிச்செய்யாமல் ஊழ்வினைகள் சேராமல்
உடையுணவு மனைஎன்று நெடியதுயர் கொள்ளாமல்
கடைநாயைப்போலே கதியின்றி அலையாமல்
பேயென்றும் நோயென்றும்நொந்துமனம் வேகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவரைச் சேராமல் தீச்செயல்கள் செய்யாமல்

மாதர் வலைப்பட்டு வேதனையில் மாளாமல்

வேதியரைக் கோயில்களைப் புறக்கணிப்புச் செய்யாமல்

சூதுகள் களவுடையோர் சூழலிலே வாழாமல்

நீதிநெறி கைப்பிடிக்க நீயருள வேண்டுமம்மா

தாயே உன்திருப்பணியில் தமியனோர் தொண்டனென

வாயால் உனைப்பாட வரமருள வேண்டுமம்மா

காயம் மனம்வாக்கால் கனிவான தெய்வீக

நேயம் பிறக்கின்ற நிலையருள வேண்டுமம்மா

உன்னைப் பணிவோர்கள் ஊறின்றி வாழ்வதற்குக்

கன்னியே நின்கருணைக் கண்ணாலே காத்திடம்மா

அன்பினிலேஇன்பமிகும் அறிவுநிலை பெறுவதற்கு

பொன்பெருகு நின்பாதம் பொருந்துநிலை தாருமம்மா

காலபய மில்லாமல் காத்திடுவாய் காளியம்மா

மாலவனின் தங்கையே வரதகாளி யம்பிகையே


உனக்கு அடைக்கலமே ஓங்கார சத்தியம்மா

மனக்குறைகள் இல்லாமல் வாழ்வாய் அம்பிகையே

உனக்கேயடைக்கலமே ஓங்கார சக்தியம்மா

மனக்குறைகளில்லாமல் வாழவைப்பாய் அம்பிகையே

சுபம்



அருட்கவி

**சீ. விநாசித்தம்பிப் புலவர்**(M.A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஜனைப்பாடல்

ஆதிபர மேஸ்வரியே வரதகாளியம்மா – உன்
அடியிணையைத் தேடிவந்தேன் வரதகாளியம்மா
சோதிவடி வானவளே வரதகாளியம்மா – உனது
தோத்திரமே பாடுகின்றோம் வரதகாளியம்மா

(ஆதி)

உலகமெல்லாம்பெற்றவளே எங்கள் காளியம்மா – எங்கும்
உயிர்க்குயிராய் நிற்பவளே எங்கள் காளியம்மா
கலையெல்லாம் நீதருவாய் எங்கள் காளியம்மா – எமக்கும்
கவலைவரா தணைத்திடுவாய் எங்கள் காளியம்மா

(ஆதி)

சரவணையூர் வந்திருந்தாய் நடனகாளியம்மா – மக்கள்
சஞ்சலங்கள் தீர்த்தவளே நடனகாளியம்மா
சரவணனைப் பெற்றவளே நடனகாளியம்மா – கையில்
சக்திவடி வேல்கொடுத்தாய் நடனகாளியம்மா

(ஆதி)

விடையேறும் சிவனுடனே ஊழிக்காளியம்மா – நீ
சடைகுலுக்கி நடம்புரிந்தாய் ஊழிக்காளியம்மா
படையெங்கும் சூழ்ந்துவர ஊழிக்காளியம்மா – கொடிய
பகையசுரர் குலமழித்தாய் ஊழிக்காளியம்மா

(ஆதி)

தில்லைக்காளி வடிவெடுத்தாய் சோதிக்காளியம்மா – அன்பர்
சிந்தையிலே குடியிருந்தாய் சோதிக்காளியம்மா
அல்லலெலாம் தீர்ப்பாயே சோதிக்காளியம்மா – உன்றன்
அடியிணைக்கே அடைக்கலமே சோதிக்காளியம்மா

(ஆதி)

**(அருட்கவி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [2]

| | |
|---|---|
| சிங்கத் லேறிவரும் | காளித்தாயே – வளர் |
| சிங்காரச் சடையழகி | காளித்தாயே |
| தங்கச் சிலம்பழகி | காளித்தாயே – அருட் |
| சல்லாப நடையழகி | காளித்தாயே |
| | |
| பேராயிரம்படைத்த | காளித்தாயே – இந்தப் |
| பிரபஞ்ச மாட்சிசெயும் | காளித்தாயே |
| தீராத பிணிதீர்க்கும் | காளித்தாயே – கல்வி |
| செல்வசுகந் தந்திடுவாய் | காளித்தாயே |
| | |
| அகிலாண்டநாயகியே | காளித்தாயே – வரும் |
| அடியாரைக் காப்பவளே | காளித்தாயே |
| சுகமெல்லாம் தருபவளே | காளித்தாயே – தொண்டர் |
| துன்பவினை தீர்ப்பவளே | காளித்தாயே |
| | |
| கருநீல மேனியளே | காளித்தாயே – தேவர் |
| காணாத நெடியவளே | காளித்தாயே |
| தருயாகத் தீயினிலே | காளித்தாயே – நீ |
| தனிவடிவில் நின்றிடுவாய் | காளித்தாயே |
| | |
| சூலமழு வேலுடனே | காளித்தாயே – வளர் |
| சோதிமுகம் காட்டிடுவாய் | காளித்தாயே |
| கலைபயமில்லாமல் | கலைத்தாயே – எம்மை |
| காப்பதுன்றன் பாரமம்மா | காளித்தாயே! |
| | |
| சூலம்மழு வேலுடனே | காளித்தாயே – வளர் |
| சோதிமுகங் காட்டிடுவாய் | காளித்தாயே |
| காலபய மில்லாமல் | காளித்தாயே – எம்மைக் |
| காப்பதுன்றன் பாரமம்மா | காளித்தாயே |

(அருட்கவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தில் பைரவர் பெருமான்
பிரதிஷ்டை செய்தபோது



மாநோன்பு நிகழ்வின்போது
சிங்க வாகனத்தில் காளி அம்பாள்



ஆலய பிரதம குருவும்
ஆலய குருவும் எழுந்தருளி
அம்மனோடு



விஜயதசமியின் போது
சிங்க வாகனம்
வெள்ளோட்டம்



இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட
[illegible]மாரியம்பாள் பிரதிஷ்டையின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3)

# பஜனைப் பாடல்

1) அன்னையேசிவ சத்தியம்மா வரதகாளி அம்மையே!
சரவணைப்பதி யமர்ந்தாய் வரதகாளி அம்மையே!
பொன்னினம்பல நடனமாடும் வரதகாளி அம்மையே!
புவனமெல்லாம் நிறைந்திருந்தாய் வரதகாளி அம்மையே!

2) அன்பர் நெஞ்சில் வாழும்தாயே வரதகாளி அம்மையே!
அல்லலெல்லாம் தீர்த்திடம்மா வரதகாளி அம்மையே!
துன்பம்போக்கும்சூலம்கொண்டாய் வரதகாளி அம்மையே!
சூழும்வறுமை துடைத்தருள்வாய் வரதகாளி அம்மையே!

3) சிலம்பொலிக்க வந்தருள்வாயீ வரதகாளி அம்மையே!
சிவந்தசடைகள் குலுங்கவருவாய் வரதகாளி அம்மையே!
தலம்செழிக்க வளம்சுரப்பாய் வரதகாளி அம்மையே!
தமைசெழிக்கக் கருணைசெய்வாய் வரதகாளி அம்மையே!

4) சிங்கமேறிக் கொழுவிருப்பாய் வரதகாளி அம்மையே!
தீயஅசுரர் குலமழித்தாயீ வரதகாளி அம்மையே!
எங்கள் கவலை நீக்கிடம்மா வரதகாளி அம்மையே!
இன்பவாழ்வை ஆக்கிடம்மா வரதகாளி அம்மையே!

5) ஈசன்தாலி ஒளிபரப்ப வரதகாளி அம்மையே!
இடையில்ஒட்டி யாணம்மின்ன வரதகாளி அம்மையே!
வாசமாலை மார்பிடை வரதகாளி அம்மையே!
வளையற்கரங்கள் அசைத்துவருவாய் வரதகாளி அம்மையே!

6) நித்தமுன்னைத் தோத்தரித்தோம் வரதகாளி அம்மையே!
நெஞ்சுகுளிர நலஞ்சுரப்பாய் வரதகாளி அம்மையே!
அத்தனும் நீ அம்மையும் நீ வரதகாளி அம்மையே!
அடியிணைக்கே சரணடைந்தோம் வரதகாளி அம்மையே!

**(அருட்கவி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - சரவணைமேற்கு
ஸ்ரீ அருள்வரத காளியம்மை
# திருப் பொன்னூஞ்சல்

## காப்பு

பிரணவனே ஐங்கரனே உமையாள் பெற்ற
பெருமகனே வல்லபையின் கணவா, சோதிச்
சரவணற்கு மூத்தவனே அடியார் நெஞ்சில்
தாங்கியருள் ஒளிகாட்டும் ஞானக் குன்றே
சரவணையில் அமர்ந்த அருள் வரத காளித்
தாயாடும் பொன்னூஞ்சல் பாடுதற்கு
விரவறுகு மந்தாரை வன்னிசூடும்
விநாயகரே நின்கழலே காப்பதாமே!

## நூல்

1. மலைமேவுசிவன்பாகம் விளங்கும் தாயே!
வருசுருதி ஆகமங்கள் விளக்கும் தாயே!
கலைமேவுஞானவடி வான தாயே!
கருதுவார் துயர்தீர்க்கும் காவல் தாயே!
நிலைமேவுபேரின்பம் வழங்கும் தாயே!
நெடியசிங்கமீதிருக்கும் வீரத் தாயே!
அலைகடல்சூழ் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை யாடீரூஞ்சல்!

2. பொன்பெருகு வேதங்கள் தூண்களாக
பொலிவுதரு வாகமங்கள் நாண்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுயர் கலைகளெலாம் விட்டமாக
இதிகாச புராணம்பரி வட்டமாக
முன்புணரும் பிரணவமே பீடமாக
மொழிந்ததிரு முறைகள் மணிமாடமாக
அன்புவளர் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்!

3. பானுடன் பனித்திங்கள் கவிகை தாங்கி
பதுமமகள் கல்விமகள் கவரி ஓங்க
வானவர்கோன் முதலானோர் விருது காட்ட
வாரணனும் வேலவனும் மாலை சூட்ட
தானமுயர் நாள்கோளர் தீப மேந்த
சார்விஜயை ஜயைஎன்பார் வடந் தொட்டாட்ட
ஆனினம்வாழ் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்!

4. மறம்பெருகு மசுரர்குலம் வாளால் மாய்த்து
மனங்குளிர மன்பதைகள் வாழ வைத்தாய்
குறம்பெரகு நீலவள்ளி நாத னுக்கு
கொடைபெருகு வேல்கொடுத்து வாழ்த்திவிட்டாய்
திறம்பெருகும் ஐம்பூத நிகழ்ச்சி யெல்லாம்
திருவிழியால் நடத்துகின்ற இமய வல்லி
அறம்பெருகு சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்!

5. அறிவரிய கிழவியாய்க் கன்னியாகி
அழகுநிறை குழந்தையாய் காட்சிகாட்டி
செறிநிழலார் வேம்பருகில் கோயில்கொண்டு
சேரடியார் நோய்நீக்கி நெடிய துன்ப

அருட்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைகளும் நீங்கிநில வளம் செழிக்க
மனைசெழிக்க நிதிசெழிக்க வைத்தாயம்மா
அறுமுகன்வாழ் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீஊஞ்சல்!

6. மணிமகுடச் சுட்டியும் மதிமுகத்தின்
வளரொளியும் சுருள்தோடும் மணிமூக்குத்தி
அணவுதுவர்த் திருவாயும் தாலியோடே
அமைந்தபொன் மாலைகளும் கரங்களெல்லாம்
இணைவுடைய வளையல்களும் சிலம்புத்தாளும்
எழிலுடையும் பொலியவரும் செல்வியே, வான்
அணி பொழில்சூழ் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடிஊஞ்சல்!

7. நமசிவாயப் பரமேசன் வேதம் நான்கை
நாயாக்கிச் சடையேறு சூல மேந்திச்
சமரமிடு காலபை ரவராய் வந்து
தனியாலங் காட்டிலே நடனமாட
தமருகசீலக் கூத்தாடி முனிவர்காணும்
சாந்தினியாய் நின்றபரா சக்தியம்மா
அமுதவயற் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீஊஞ்சல்!

8. மகங்குளிரும் மாசிமதி யமுனைவந்து
வல்லதக்கன் தலைஆட்டுத் தலையாய்ச் செய்தாய்
சுகங்குளிரும் ஞானிஅபி ராமிப்பட்டர்
சொன்னபடி மதிகாட்ட தோடெறிந்தாய்
செகங்குளிரும் படியளந்த தாயே, எங்கள்
தீவினை தீர்த் தின்பவாழ் வருள்வாயம்மா

அருட்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்குளிரும் சரவணையின் மேல்பால் மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்!

9. கோலமிகு சடையாடச் செவிகளாட!
குமுதவா யாடமங் கலநா ணாட!
சீலமிகு கரமாடச் செம்பட் டாட!
திரிசூலம் கலசம்வாள் குலிசமாட!
காலமிசை வருசிங்க மாடத்தண்டை!
நவில்சிலம்புக் கழலாட விண்ணோராட!
ஆலநிழற் சரவணையின் மேல்பால் மேவும்!
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்!!

10. சுந்தரனாம் சிவனாட, உமையாளாட
தும்பிமுகன் வேலழகன் ஆட, யாகம்
வந்துபெரும் வீரபத்திரனார் ஆட
மாதவனும் திருமகளும் ஆட, நீதி
தந்த அரி கரமைந்த னாட வாணித்
தாயாட வைரவப் பெருமானாட
அந்தணர்வாழ் சரவணையின் மேல்பால் மேவும்!
அருள்வரத காளியம்மை யாடீருஞ்சல்!

11. பரமசுகம் தருபவளே ஆடீரூஞ்சல்!
பவம்தீர்க்க வருபவளே ஆடீரூஞ்சல்!
கருணைநெறிக் கிழுப்பவளே ஆடீருஞ்சல்!
காலனைவந் தெதிர்ப்பவளே ஆடீரூஞ்சல்!
மருவுமிடி தீர்ப்பவளே ஆடீரூஞ்சல்!
மலரடியில் சேர்ப்பவளே ஆடீரூஞ்சல்!
அரவுதொழும் சரவணையின் மேல்பால்மேவும்!
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்!

அருட்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

ஆதிபுகழ்ச் சரவணையில் வீற்றிருக்கும்
அருள்வரத காளியம்மை திருத்தாள் வாழி
வேதநெறி வாழி ஆ கமங்கள் வாழி
மேதினியிற் தெய்வீக நீதிவாழி
ஓதுதிரு முறைவாழி புராணம் வாழி
உண்மையுணர் திருத்தொண்டர் கூட்டம் வாழி
மாதவத்தர் போற்றுகின்ற பசுக்கள் வாழி
மக்களெலாம் சுகம் செழித்து வாழி வாழி

## மங்களம்

வித்தக விநாயகர்க்கு மங்களம் மங்களம்
விண்கயிலை நாதனுக்கு மங்களம் மங்களம்
உத்தமி பராசக்திக்கு மங்களம் மங்களம்
ஓங்கார வேலனுக்கு மங்களம் மங்களம்
சித்தியருள் ஐயனுக்கு மங்களம் மங்களம்
தீரவீர பத்திரர்க்கு மங்களம் மங்களம்
மத்துவெண்ணெய் நாரணர்கு மங்களம் மங்களம்
வரதகாளி யம்பிகைக்கு மங்களம் மங்களம்

**அருட்கவி. சீ. விநாசித்தம்பி புலவர் (M.A)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் அருட் கீர்த்தனைகள்

**பல்லவி**

**சிந்துபைரவி – ரூபகம்**

(1)

செல்வக் குழந்தை யம்மா – நீ
சித்தத்தில் விளைந்த ஞானமுத் தம்மா

**அனுபல்லவி**

செல்வமும் கல்வியும் வீரமும் தந்திடும்
சிவகுரு சந்திர யோகம் பிறந்திடும்

**சரணம்**

சின்னச் சிரிப்புச் சிரித்துச் சிரித் தென்றன்
இன்ன லொழிந்திடுவாய் – மெல்ல
அன்ன நடன நடை நடந்து, பசிக்
கமுதமும் தந்திடுவாய் – உயிர்
மன்னுங் கருணைக் கடைவிழியாலே
பொன்னின் கதி தருவாய் – தினம்
உன்னை மறவாத நல்லருள் மருந்து
தின்னத் தின்னத் தருவாய் – எங்கள்

**பல்லவி**

**கௌரிமனோகரி ஆதி**

(2)

சந்திர ஜோதியில் தண்டச் சலம்பசைய
தாண்டவ மாடிடும் தனிமயிலே – அருள்

**அனுபல்லவி**

சந்தன மேனி குங்கும மாக
தங்கு சராசரம் மங்களமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

நீயசையா விடியல் உலகேது - உன்
நிகழ்ச்சி யில்லாவிடில் கலையேது - திரு
வாயசையாவிடில் மறையேது விழி
மலரசையாவிடில் சுகமேது - வளர்

## மத்திம காலம்

தீனதயாபரி கௌரி மனோகரி
தில்லை நாயகி சிவரூபி
சிற்பர நாடக கற்பக பூரணி
அற்புத தற்பர தத்துவமே
அபய வரத உபய கரமொ டாடிடும்
அருணடன திரிநயன ஜெக ஜெனனி
வானந்தத் தேனருளும் பேரின்பப் பேறருளும்
சீரன்புப் போதருளும் அரகர சிவசிவ அபிநய
சிதாகாச மகாரூப சதா நேச - அருள் சந்திர

**பல்லவி**

**சாருகேசி ரூபகம்**

(3)
என்ன வடிவில் நீ வருவாய்
எனது மகனக் கவலை தீர

**அனுபல்லவி**

அன்னை மனோன் மணித்தாயே
அருள் வாக்கொன் றுரைப்பாயே.

**சரணங்கள்**

தோடெறிந்து சந்திரனைத்
தோன்றச் செய்த ரூபியோ
கூடல் மதுரை யாட்சி செய்து
குறைகள் தீர்த்த தேவியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகத்தைத் தந்து கம்பன்
பதவி காத்த வாணியோ
நாடிலங்க அறம் புரித்து
நயந்த கம்பை ராணியோ

தரும ரனைப் பூசை செய்த
சைலேந்திரன் மயிலே
தருண முலைப் பால்கொடுத்து
தமிழ் சுவைத்த குயிலோ

**பல்லவி**

**முகாரி ஆதி**

(4)
உனது பதமலரைப் பிடிப்பே னோ – இனி
மனது படுந்துயரை முடிப்பே னோ – அம்மா

**அனுபல்லவி**

கனகேஸ் வரியே சிவகாமி – திருக்
கடவூர் மேவிய அபிராமி – அம்மா (உனது)

**சரணம்**

கற்றுணர் வில்லாத மர மானேன் – உலகில்
களைத்து விழுந்திடுபம் பர மானேன் – எல்லாம்
பெற்றவளே என்னைத் தள்ளாதே செய்த
பிழையைத் திருவுள்ளத்தில் கொள்ளாதே – அம்மா

**(அருட்கவி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்ரநாயகி துதி

ஸ்ரீ சக்ர ராஜ ஸிம்மாஸ னேச்வரி
ஸ்ரீ லலிதாம்பிகையே புவனேச்வரி (ஸ்ரீ)

ஆகமவேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோகரி
ஞான வித்யேச்வரி ராஜராஜேச்வரி (ஸ்ரீ)

பலவிதமாயுனைப் பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலக முழுவதும் என தகமுறக் காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சி காமேச்வரி (ஸ்ரீ)

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக் கூட்டிவைத்தாய்
நிழலெனத்தொடர்ந்த முன்னூழ்க்கொடுமையை நீங்கச் செய்தாய்
நித்யகல்யாணி பவானி பத்மேச்வரி (ஸ்ரீ)

துன்பப் புடத்திலிட்டுத் தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்த முன்மாயம் நீக்கி பிறந்த பயனைத் தந்தாய்
அன்பைப் புகட்டி உந்தன் ஆடலைக் காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அகிலாண்டேச்வரி (ஸ்ரீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துமாரி துதி

உலகத்துநாயகியே எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
உன் பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

கலகத் தரககர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

நிலையெங்கும் காணவில்லை -எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

துணி வெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல் வெளுக்க சம்பலுண்டு – எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரி

மணி வெளுக்க சாணையுண்டு – எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்துமாரி

மனம் வெளுக்க வழியில்லை – எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரி

பிணிகளுக்கு மாற்றுண்டு – எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்துமாரி

பேதமைக்கு மாற்றில்லை – எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரி

அணிகளுக்கோ ரெல்லையில்லை – எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்துமாரி

அடைக்கலமிங் குனைபுகுந்தோம் – எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் பராசக்தி துதி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

கணபதிபதி ராயன் – அவனிருகாலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந்திடவே – விடுதலை கூடி மகிழ்ந்திடவே (ஓம்)

சொல்லுக் கடங்காவே – பராசக்தி சூரத் தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் – பராசக்தி வாழியென்றே துதிப்போம் (ஓம்)

வெற்றி வடிவேலன்–அவனுடைய வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ–பகையே துள்ளி வருகுது வேல் (ஓம்)

தாமரை பூவினிலே–சுருதியைத் தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே–கண்ணிலொற்றிப் புண்ணிய மெய்திடுவோம் (ஓம்)

பாம்புத் தலைமேலே – நடஞ்செயும் பாதத்தினைப் புகழ்வோம் (ஓம்)
மாம்பழ வாயினிலே – குழலிசை வண்மை புகழ்ந்திடுவோம் (ஓம்)

செல்வத் திருமகளைத் – திடங்கொண்டு சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெல்லாந் தருவாள் – நமதொளி திக்கனைத்தும் பரவும் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கால துர்க்கா அஷ்டகம்
## (ஹரிவராஸனம் மெட்டில் பாடவும்)

(1) வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ் அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய துர்க்கையே.

(2) உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

(3) செம்மையானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மையானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மையானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

(4) உயிரு மானவள் துர்க்கா உடலுமானவன்
உலகமானவள் துர்க்கா எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) துன்ப மற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

(6) குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திருசூலி மாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

(7) ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு காலத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

(8) கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீங்கிட சடுதியில் வந்திடும் சங்கரி செளந்தரியே
கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல் கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாட்சி. (1)

கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவ ஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாட்சி. (2)

சங்கரி செளந்தரி சதுர்முகன் போற்றிட சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எம்குலந்தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தநற துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாட்சி (3)

தன தன தந்தன தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொலி கூவிட கண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாட்சி (4)

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக் கொடுத்த நல்குமரியளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நற்சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாட்சி. (5)

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லையென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரும் இருளில் பரிதியாய் வந்து பழ வினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாட்சி. (6)

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரிகௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹிஷாஸூர மர்த்தனி ஸ்தோத்திரம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விஸ்வ வினோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய ஸிரோதி நிவாஸினி
விஷ்ணு விலாசினி ஜிஷ்ணு நுதே
பகவதி ஹே ஸினிகண்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரி க்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸூர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸூதே. (1)

ஸூரவர வர்ஷிணிதுர்தர வர்ஷினி
துர்முக மர்ஷினி ஹர்ஷ ரதே
த்ரிபுவன போஷினி ஸங்கர தோஷினி
கில்பிஷ மோஷினி கோஷரதே
தனுஜநி ரோஷினி திதிஸூத ரோஷினி
துர்மத ஸோஷினி சிந்துஸூதே
ஜய ஜய ஹே மஹிஷஸூர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸூதே. (2)

அயி ஜகதம்ப மதம்ப கதம்பவந
ப்ரிய வாஸினி ஹாஸரதே
ஸிகரி ஸிரோமணி துங்க ஹிமாலய
ச்ருங்க நிஜாலய மத்யகதே
மது மதுரே மது கைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸூர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸூதே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயி ஸதகண்ட விகண்டி தருண்ட
விதுண்டித ஸுண்ட கஜாதிபதே
ரிபுகஜ கண்ட விதாரண சண்ட
பராக்ரம சுண்ட ம்ருகாதிபதே
நிஜபுஜ தண்ட நிபாதிதி கண்ட
விபாதித முண்ட படாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (4)

அயிரண துர்மத ஸத்ருவதோ தித
துர்தர நிர்ஜர ஸக்திப்ருதே
சதுர விசார துரீண மஹா ஸிவ
தூத க்ருத ப்ரமதா திபதே
துரித துரீஹ துராஸய துர்மதி
தானவதூத க்ருதா ந்தமதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (5)

அயி ஸராணாகத வைரிவ தூவர
வீர வராபய தாயகரே
த்ரிபுவன மஸ்தக ஸுல விரோதி
ஸிரோதி க்ருதாமல ஸுலகரே
தூமி தூமி தாமர துந்து பிநாத
மஹோமுகரீ க்ருத திக்மகரே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தனி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயி நிஜ ஹும் க்ருத மாத்ர நிராக்ருத
தூம்ர விலோசந தூம்ரஸதே
ஸமர விஸோஷித ஸோணித பீஜலதே
ஸமுத்பவ ஸோணி த பீஜலதே
ஸிவ ஸிவ ஸும்ப நிஸும்ப மஹாஹவ
தர்பித பூதபிஸாசரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தனி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (7)

தனு ரனு ஸங்கரண க்ஷண
ஸங்க பரிஸ்புர தங்க நடத்கடகே
கனக பிஸங்க ப்ருஷத்க நிஷங்க
ரஸத்பட ச்ருங்க ஹதாவடுகே
க்ருத சதுரங்க பலக்ஷிதிரங்க
கடத் பஹுரங்க ரடத்படுகே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (8)

ஜய ஜய ஜப்ஜயே ஜய ஸப்த
பரஸ் துதி தத்பர விஸ்வநுதே
பண பண பிஞ்ஜிமி பிங்க்ருத நூபுர
ஸிஞ்ஜித மோஹித பூதபதே
நாடித நடார்த்த நட நடநாயக
நாத நாட்ய ஸுகானரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயிஸுமன ஸுமன ஸுமன

ஸுமன ஸுமன ஸுமனோஹர காந்தியுதே

ச்ரித ரஜனீ ரஜனீ ரஜனீ

ரஜனீ ரஜனீ கர வக்த்ரவ்ருதே

ஸுநயன விப்ரமர ப்ரமர

ப்ரமர ப்ரமர ப்ரமராதிபதே

ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி

ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (10)

ஸஹித மஹா ஹவ மல்லமதல்லிக

மல்லித ரல்லக மல்லரதே

விரசித வல்லிக பல்லிக மல்லிகை

பில்லிக பில்லிக வர்கவ்ருதே

ஸிதக்ருத புல்லிஸ முல்லஸி தாருண

தல்லஜ பல்லவ ஸல்லலிதே

ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி

ரம்ய கபர்த்தினி சைலஸுதே (11)

அவிரள கண்ட கலந்தமத மேதுர

மத்த மதங்கஜ ராஜபதே

த்ரிபுவன பூஷண பூத கலாநிதி

ரூப பயோநிதி ராஜஸுதே

அயிஸுத தீஜன லாலஸ மானஸ

மோஹன மந்மதராஜ ஸுதே

ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தனி

ரம்ய கபர்த்தினி சைலஸுதே. (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிதேவி அனுஸ்டித்த
# கேதாரீஸ்வரர் விரதம்

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவாகனப் பிள்ளையாய்
சொற்குற்றமொடு பொருட் குற்றம் வராமற்கா.

### காப்பு

காரனைய கூந்தற் கவுரியி யற்றியகே
தாரவிரதக் தை யான்படிக்கச் - சீரிலகும்
ஐந்து கத்தந்திமுகத் தண்ணலடியார்க் கருளுங்
கந்தமலர்ச் செஞ்சரனே காப்பு.

### அம்பாள் துதி

ஆத்தாளை யெங்களபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவியடக்கக்
காத்தாளை யங்குச பாசாங்குச முங்கரும்பு மங்கை
சேர்த்தாளைமுக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லை

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளி மகா தேவியரே
காலமெல்லாம் பின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமங்கள் எளிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்குயிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித் தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரகுணம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர் விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நூண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடை தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிடுவாய்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இரங்கிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் பெருகிவரும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்குகிறோம்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்துகாட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்குவ மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
இச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியோகி அருட்கவி சீ. விநாசித்தம்பி *(MA)* அவர்கள் இயற்றியது

# கூட்டுப்பிரார்த்தனை பிள்ளையாரப்பா

**ராகம்: செஞ்சுருட்டி** **தாளம்: ஆதி**

பிள்ளையாரப்பா எங்கள் பிள்ளையாரப்பா

பிரணவமே வடிவான பிள்ளையாரப்பா

உள்ளத்திலே குடியிருக்கும் பிள்ளையாரப்பா
உமையம்மை மடியிருக்கும் பிள்ளையாரப்பா
அள்ளியள்ளி வரந்தருவாய் பிள்ளையாரப்பா
அல்லலெல்லாம் தீர்த்திடுவாய் பிள்ளையாரப்பா

மேருவிலே மறைவரைந்தாய் பிள்ளையாரப்பா
வியாசருக்குக் கருணைசெய்தாய் பிள்ளையாரப்பா
காரணனே வாரணனே பிள்ளையாரப்பா
கஜமுகனை யடக்கிவைத்தாய் பிள்ளையாரப்பா

பெருச்சாளி வாகனனே பிள்ளையாரப்பா
பேழைவயிறு கொண்டவனே பிள்ளையாரப்பா
மருப்பேந்தி வந்திடுவாய் பிள்ளையாரப்பா
மந்தாரை வன்னிசூடும் பிள்ளையாரப்பா

வல்லபையின் நாயகனே பிள்ளையாரப்பா
வளரறுகு விருப்புடைய பிள்ளையாரப்பா
மெல்லமெல்ல வந்திடுவாய் பிள்ளையாரப்பா
விளங்குதமிழ்க் கலைதருவாய் பிள்ளையாரப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பிக் கணேசன்

**தாளம் : ஆதி**

தும்பிக் கணேசனைப் பாடுங்கள்
தோப்புக் கரணங்கள் போடுங்கள்
நம்பிய வன்கோயில் கூடுங்கள்
நல்ல மலர்மாலை சூடுங்கள் (தும்பி)

பால்பழம் தேங்காய் அவல்அப்பம்
படைத்து வேண்டுங்கள் விண்ணப்பம்
மூலப் பொருளாய் முன்வருவான்
மூழ்வினை நீங்கிச் சுகந்தருவான் (தும்பி)

அறுகு தாமரை மந்தாரை
அலரி சண்பகப் பூவன்னி
நறிய கூவிளை திருவாத்தி
நந்தி மல்லிகை புனைந்தேத்தி (தும்பி)

வக்கிர துண்டா உமைபாலா
வல்லபை நாதா சிவரூபா
விக்கின ராஜா கஜவதனா
விநாய காஎனப் புகழ்பேசி (தும்பி)

கல்வியும் செல்வமும் சுகவாழ்வும்
கனத்த வீரமும் தந்திடுவான்
வல்வினைத் துன்பம் தீர்த்திடுவான்
மலரடி தன்னில் சேர்த்திடுவான் (தும்பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமானே

## ஓம் நமச்சிவாயம்

**ராகம்: பூபாளம்** **தாளம்: ஆதி**

ஓம்நமச் சிவாயம் ஓம்நமச் சிவாயம்
உமையவள் பாகன் ஓம்நமச் சிவாயம்
ஓம்நமச் சிவாயம் ஓம்நமச் சிவாயம்
உள்ளத்தி லிருப்பான் ஓம்நமச் சிவாயம் (ஓம்)

சிற்சபை தன்னில் திருநட மிடுவான்
சிருட்டி முதலிய ஐந்தொழில் புரிவான்
கற்பக மாகிக் கருணை பொழிவான்
கருதிய செல்வம் உடனே தருவான் (ஓம்)

அடியார் துணையாய் அருகில் இருப்பான்
ஆனந்த வாழ்க்கைப் பேறுகள் அருள்வான்
துடியும் சூலமும் தூக்கிய கையன்
சுந்தரத் தில்லையி லாடிடு மையன் (ஓம்)

முப்பான் மூவருக் கருளிய செல்வன்
மூவரு மறியாத் தேவம கேசன்
ஒப்பரும் சோதி வடிவங்க ளுடையான்
ஒன்றாய்ப் பலவாய் உருவரு வானான் (ஓம்)

மண்ணைச் சுமக்க மதுரைக்கு வந்தான்
வாசகம் எழுதத் தில்லைக்கு வந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்பற் காகக் காளத்தி நின்றான்
காளியொ டாடி நடனத்தில் வென்றான் (ஓம்)

பாலைக் கொடுத்து சூலை கொடுத்து
பயில்நூல் காட்டி ஓலையைக் காட்டி
நாலு குரவரின் பாட்டு நயந்தான்
ஞானமகன் மொழி கேட்டு மகிழ்ந்தான் (ஓம்)

அன்பெனும் பிடியில் அகப்படும் சோதி
அறிவால் அறியும் அற்புத நீதி
பொன்மலை மகளைப் பொருந்திய பாதி
புவனச ராசரம் பூத்தஅ நாதி (ஓம்)

நீர்மலர் தூவி ஐந்தெழுத்தோதி
நிறைகமழ் தூப தீபங்களேற்றி
நேர்மனம் குவிந்து பாடித் துதிப்போம்
நிமலன் பாதம் நெஞ்சில் பதிப்போம் (ஓம்)

இம்மையும் மறுமையும் இன்பம் தருவான்
இன்னல் தீர்ப்பான் இடபத்தில் வருவான்
வெம்மலம் போக்கி மெய்யருள் புரிவான்
வினைப்பவம் நீக்கி வீடும்தருவான் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரம் நீ

**தாளம் : ஆதி**

ஆதாரம் நீதானமம்மா, ஆறுதல் சொல்வாயம்மா
பாதார விந்தம்வேண்டி பாடிப்பணிந் தோமம்மா

மாதாம னோன்மணியே, மன்றாடுமீஸ் வரியே
வேதாக மம்விளக்கும், மெய்ஞ்ஞானப் பூங்குயிலே

(ஆதாரம்)

காற்றிடைப் பஞ்சு போலே, கலங்கித் தவித்தோ மம்மா
ஆற்றில் துரும்பு போலே, அலைமோதி நொந்தோமம்மா

கூற்றை உதைத்தாயம்மா, கொடியோரை மாய்த்தாயம்மா
ஆற்றொணா தெங்கள் துன்பம், ஆத்தாளே தீர்ப்பாயம்மா

வீட்டை இழந்தோ மம்மா. விளைநிலங்க ளழிந்ததம்மா
நாட்டிலே வாழ்வதற்கு, நடுநடுக்கம் கொண்டோமம்மா

சூட்டும் முடிபுனைந்து, தொல்மதுரை யாண்டாயம்மா
பாட்டுத் தமிழ்வளர்த்தாய், பரிந்துவிழி பார்ப்பாயம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி

**ராகம்: கல்யாணி** **தாளம்:ரூபகம்**

ஓம் சிவகாமி ஓம் சிவகாமி
ஓங்கியதில்லை நாடகசுவாமி

அம்பலநாயகி ஆடகசுந்தரி
சம்பூரணியே சர்வாட்சரியே (ஓம்)

திரிபுரசுந்தரி சிவசங்கரியே
அரிமகிழ்சோதரி ஆதிமகேஸ்வரி (ஓம்)

கலைதரு மகளே கதிதரு மயிலே
மலைதரு முகிலே மதிதரு மழுதே (ஓம்)

உருவேயருவே ஒன்றேபலவே
கருவேஉயிரே கதியேவிதியே (ஓம்)

தாயேவருவாய் சாந்தம்தருவாய்
வாய்மனமிருப்பாய் மறைமொழியுரைப்பாய் (ஓம்)

பிறவிகள் எல்லாம் பெருந்துணை வருவாய்
உறவாய் அறிவாய் உயர்நெறி யருள்வாய் (ஓம்)

ஐம்புல னடக்கம் ஆசையின் ஒடுக்கம்
செம்பொருளுணர்வு சிறியேற் கருள்வாய் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமாதேவி

## உமையவளே

**தாளம்: ஆதி**

உமையவளே ஞானசக்தி
ஓங்கார ரூபசக்தி
இமயமலை இருந்தசக்தி
இதபரப்பே றருளும்சக்தி

ஆத்தாளே ஆரணியே
அகிலாண்ட காரணியே
கூத்தாடும் சிவமயிலே
குலவுமறை மொழிக்குயிலே (உமை)

அமிர்தலிங்க அபிராமி
அம்பலத்தின் சிவகாமி
நமசிவாயக் கலைவாணி
நலந்த ரூபங் கயராணி (உமை)

தீராநோய் தீர்த்திடுவாய்
சிங்கத்திலே வந்திடுவாய்
நீராடும் கைலையிலே
நிரஞ்சனியாய் வீற்றிருப்பாய் (உமை)

ஆதார மூலத்திலே
அக்கினியாய் எழுந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வேதாந்த | வெளிச்சுடராய் | |
| மெய்ஞ்ஞான | வீடருள்வாய் | (உமை) |
| உயிருக்குள்ளே | உயிராகி | |
| உள்ளியங்கும் | சக்கரமே | |
| பயமறுத்துப் | பவமறுத்துப் | |
| பதமலரைத் | தந்திடுவாய் | (உமை) |
| எண்ணும்மனம் | மொழிகாயம் | |
| ஈஸ்வரியே | நின்பணிக்கே | |
| புண்ணியங்கள் | புரிவதற்குப் | |
| பொழிந்திடுவாய் | திருளருளே | (உமை) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை
# சிங்கத்திலே வந்திடுவாய்

சிங்கத்திலே வந்திடுவாய் துர்க்கைத்தாயே – எங்கள்
தீவினைகள் தீர்த்திடுவாய் துர்க்கைத்தாயே
சங்கரனின் பங்கிருப்பாய் – எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் துர்க்கைத்தாயே

மாளா மகிடன்தலை துர்க்கைத்தாயே – நீ
வாளால் துணித்துவென்றாய் துர்க்கைத்தாயே
நீளாழி மாயனுக்குத் துர்க்கைத்தாயே – நீ
நிறைவான சோதரியே துர்க்கைத்தாயே

செவ்வான மேனியளே துர்க்கைத்தாயே – நீ
தேசவிளக் காகிநிற்பாய் துர்க்கைத்தாயே
ஓவ்வாத கொடியவரை துர்க்கைத்தாயே – நீ
ஒடுக்கியருள் செய்திடுவாய் துர்க்கைத்தாயே

கமல முகத்தழகி துர்க்கைத்தாயே – திருக்
காலில் சிலம்பழகி துர்க்கைத்தாயே
நமசி வயநடனி துர்க்கைத்தாயே – சிவ
ஞான சுமங்கலியே துர்க்கைத்தாயே

எமக்கருள் செய்திடுவாய் துர்க்கைத்தாயே – வரும்
எமபயம் தீர்த்திடுவாய் துர்க்கைத்தாயே
சுமக்கும் பாவம்நீக்கும் துர்க்கைத்தாயே – உன்
துணையடி தந்திடம்மா துர்க்கைத்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி

**ராகம்: புன்னாகவராளி** **தாளம்: ஆதி**

| | | |
|---|---|---|
| அம்பிகை | யேசிவ | முத்துமாரி |
| அண்டங்கள் | காத்திடும் | முத்துமாரி |
| நம்பின | தொண்டர்க்கு | முத்துமாரி |
| வேம்பின் | நிழலிலே | முத்துமாரி |
| வீற்றிருப் | பாயெங்கள் | முத்துமாரி |
| பாம்பினம் | தாலாட்ட | முத்துமாரி |
| பள்ளிகொள் | வாயம்மா | முத்துமாரி |
| தீராதநோய் | தீர்த்திடும் | முத்துமாரி |
| சிங்கத்தில் | வந்திடும் | முத்துமாரி |
| நாராயணன் | தங்கை | முத்துமாரி |
| ஞானசு | கந்தரும் | முத்துமாரி |
| மாரனை | மாய்த்திட்டாய் | முத்துமாரி |
| மக்களைக் | காத்திட்டாய் | முத்துமாரி |
| வீரந | டஞ்செயும் | முத்துமாரி |
| வேண்டும்வ | ரந்தரும் | முத்துமாரி |
| தங்கச் | சொரூபிணி | முத்துமாரி |
| தற்பர | சுந்தரி | முத்துமாரி |
| பொங்கு | முடுக்கிசை | முத்துமாரி |
| பொழிந்திட | ஆடுவாய் | முத்துமாரி |
| எங்களுக் | கருள்செய்ய | முத்துமாரி |
| இங்கேநீ | வந்தருள் | முத்துமாரி |
| சங்கர | சிவசிவ | முத்துமாரி |
| சரணம் | அடைக்கலம் | முத்துமாரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சுமி
## கண்பாரம்மா

**ராகம் : தோடி** **தாளம்:ஆதி**

செல்வமகா லட்சுமியே கண்பாரம்மா
நல்விளக்காய் எங்களைநீ காப்பாயம்மா

ஆனந்த வாழ்வுதரும் ஆதிலட்சுமி
ஆருயிரின் பசிதீர்க்கும் தான்யலட்சுமி
மானமுயர் வீரந்தரும் தைர்யலட்சுமி
வருகருணை மழைபொழியும் கஜஇலட்சுமி (செல்)

மகப்பேறு தந்திடுசந் தானலட்சுமி
வாழ்வெல்லாம் வெற்றிதரும் விஜயலட்சுமி
புகழ்கல்வி தருகின்ற வித்தியாலட்சுமி
புனிதமான நிதிகொடுக்கும் தனஇலட்சுமி (செல்)

சிந்தனையில் சிவம்சுரக்கும் சோதிலட்சுமி
சிகரமலை வீடுதரும் ஞானலட்சுமி
புந்தியிலே நிறைந்திடுசௌ பாக்யலட்சுமி
புனிதமனைச் சிறப்புதவும் வரதலட்சுமி (செல்)

பொன்செய்யும் மருந்தாக வருவாயம்மா
புண்ணியங்கள் புரியவரம் தருவாயம்மா
என்மனத்தே கற்பகமாய் இருப்பாயம்மா
எழுபிறப்பும் நின்கருணை புரிவாயம்மா (செல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி

**ராகம் : வாசஸ்பதி** **தாளம்: ஆதி**

ஞான வடிவான நாமகளே – சிவ
நாடக இயலிசைப் பாமகளே
தான தவநெறிக ளூட்டிடுவாய் – வெண்
தாமரைப் பூவினில் வீற்றிருப்பாய்

வீணையும் மாலையும் வேதங்களும் – கரம்
விளங்கிட வருங்கலை வாணியம்மா
காணுல கெல்லாம் நலம்பூக்க – ஒரு
களிமயி லொடுவரும் வேணியம்மா (ஞான)

பங்கயன் நாவினில் பயின்றிடுவாய் – உன்
பக்தரின் நெஞ்சினில் நடமிடுவாய்
பொங்கிய கல்வியின் மழைபொழிவாய் – அருள்
பொலிந்த கவிபாடும் வரந்தருவாய் (ஞான)

ஐம்பத்தொ ரட்சர மானவளே – வளர்
ஆரணம் ஆகமம் பூத்தவளே
கைம்மலர் தூவித ணங்கிடுவார் – மனம்
காயம் வாக்கினிற் செயற்படுவாய் (ஞான)

பளிங்கு வண்ணத்துப் பாரதியே – தவ
பக்குவம் தந்திடும் சாரதியே
உளங்குளிர் வாழ்வினைத்தருவாயே –உயிர்க்
கொளிவிளக் காயருள் புரிவாயே (ஞான)

வித்தைகள் எல்லாம் கைகூட – உன்
விரைகழற் றேனுண்டு கூத்தாட
தத்துவ மெல்லாம்தந்திடுவாய் – எங்கள்
சரஸ்வதி யம்மா வந்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா மனோன்மணி

**ராகம்: சுபந்துவராளி** **தாளம் :திஸ்ரகதி**

| | | | |
|---|---|---|---|
| ஐந்தெழுத் | தாகிய | அம்மா | மனோன்மணி |
| ஆதிச | தாசிவ | அம்மா | மனோன்மணி |
| சிந்தனைத் | தேனே | அம்மா | மனோன்மணி |
| சிதம்பர | ஜோதி | அம்மா | மனோன்மணி |
| பந்தம | றுக்கும் | அம்மா | மனோன்மணி |
| பத்திபெ | ருக்கும் | அம்மா | மனோன்மணி |
| மந்திர | ரூபி | அம்மா | மனோன்மணி |
| மங்கள | தேவி | அம்மா | மனோன்மணி |
| தத்துவ | நாயகி | அம்மா | மனோன்மணி |
| சச்சிதா | னந்த | அம்மா | மனோன்மணி |
| சித்தம | மர்ந்தாய் | அம்மா | மனோன்மணி |
| தெய்வசு | கந்தரும் | அம்மா | மனோன்மணி |
| மூவரு | மானாய் | அம்மா | மனோன்மணி |
| முத்திகொ | டுப்பாய் | அம்மா | மனோன்மணி |
| காவலு | மாவாய் | அம்மா | மனோன்மணி |
| கருணாம் | பிகையே | அம்மா | மனோன்மணி |
| உயிருக்குள் | உயிரே | அம்மா | மனோன்மணி |
| ஊழ்வினை | நீக்கிடும் | அம்மா | மனோன்மணி |
| இயலிசை | நாடக | அம்மா | மனோன்மணி |
| இலிங்கத்தில் | தங்கிய | அம்மா | மனோன்மணி |
| திருநீறு | வடிவான | அம்மா | மனோன்மணி |
| செபமாலை | தனில்வாழும் | அம்மா | மனோன்மணி |
| எருதேறி வந் | தருள் | அம்மா | மனோன்மணி |
| எமதின்னல் | போக்குவாய் | அம்மா | மனோன்மணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சி

## மதுரையில்

**ராகம்: மோகனம்** **தாளம்: ஆதி**

மதுரையில் மேவிய மீனாட்சி
மண்டல மெங்குமுன் அரசாட்சி
சதுர்மறை சொல்வது உன்காட்சி
தவங்களுக்க கெல்லாம் நீசாட்சி

மங்கை தடாதகை எனவந்தாய்
மலயத் துவஜனின் மகளானாய்
சங்கத் தமிழ்மொழி காத்தியட்டாய்
சைவ வளங்கள் பூத்திட்டாய் (மதுரை)

சொக்கரின் பாகம் வீற்றிருந்தாய்
சொல்மனு நீதிகள் வளர்த்தாய்
இக்கலி யுகத்தில் சைவநெறி
இசைபெற இலிங்கம் பூசித்தாய் (மதுரை)

பங்குனித் திங்களிற் பொங்கலிட்டு
பாடியும் பரவியும் பூசிக்கிறோம்
எங்களின் கவலையைத் தீர்த்திடுவாய்
இன்ப விழிகளால் பார்த்திடுவாய் (மதுரை)

அம்மா உனதடி யாரெல்லாம்
அலைந்து திரிவதைப் பார்த்திலையோ
இம்மா நிலத்தில் எவரணைப்பார்
ஈஸ்வரி யேநீ இரங்காயோ (மதுரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரகாளி

**ராகம்:அடாணா** **தாளம்: ஆதி**

பத்திர காளிப ராசக்தி
பாட வரந்தரு வாய்சித்தி
நித்தியமுன்னை நெஞ்சிருத்தி
நினைவார்க் கருள்வாய் பெருமுத்தி

தில்லையி லாடும் சுந்தரியே
தீயரை மாய்க்கும் தந்தரியே
தொல்லுல கெல்லாம் நின்றாயே
சூரர் குலங்களை வென்றாயே (பத்திர)

அட்சர மெல்லா முன்னடக்கம்
ஐந்து பூதமும் உன்னடக்கம்
அட்ட திசைகளும் உன்னடக்கம்
அண்ட கோடிகள் உன்னடக்கம் (பத்திர)

செம்பொற் சிலம்பு குலுங்கிடவே
செஞ்சடை ஆடிய சைந்திடவே
நம்பனொ டாலங் காட்டினிலே
நாட்டிய மாடிய நாரணியே (பத்திர)

பொல்லா வினைகள் தீர்த்திடுவாய்
புண்ணிய நெறியில் சேர்த்திடுவாய்
எல்லாம் இங்குன் நடப்பம்மா
எங்களைக் காப்பதுன் பொறுப்பம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நாராயணன்

# பாடுவோமே

**ராகம்: மாண்டு** **தாளம்: ஆதி**

நாராய ணாஎன்று பாடுவோமே – அந்த
நாத இசை ஓசையிலே ஆடுவோமே
சீரான கோகுலத்தில் கூடுவோமே – எங்கள்
தேவகியின் பாலகனைத் தேடுவோமே.

தாவுசிறைக் கூடத்திலே வந்துபிறந்தான் – தவத்
தாயாம்ய சோதைமடி மீதுவளர்ந்தான்
ஆவணியின் ரோகிணிநாள் அட்டமித்திதி – அந்த
ஆண்டவன் அவதரித்த கிருஷ்ணஜெயந்தி (நாரா)

மாடுமேய்க்கும் இடையருடன் கூடிவருவான் – ஆயர்
தேடிவைத்த வெண்ணெய்தயிர் திருடித்தருவான்
ஓடுகின்ற நதிகளிலே பாய்ந்து நீந்துவான் – பெருங்
காடுகளில் விடும் பழங்கையில் ஏந்தவான் (நாரா)

சிறுவர்களைப் .புல்லாங்குழல் ஊதியழைப்பான் – நல்ல
தெய்வக்கதை சொல்லிச்சொல்லி மெல்லச் சிரிப்பான்
அறிவுவளர் பாட்டுப்பாடித் தாளம்போடுவான் – தில்லை
அம்பலத்து நாதனைப் போல் கூத்துமாடுவான் (நாரா)

மாயமிட்ட பேய்ச்சிமுலைப் பாலைக்குடித்தான் – கொல்ல
வருமசுரர் குலம்முழுதும் தேடிமுடித்தான்
தீயகம்சன் தலைபிடித்து மண்ணில் மடித்தான் – கோடி
தேவர்சூழ்ந்து வாரகையின் ஆட்சிபிடித்தான் (நாரா)

ஹரேராம ஹரேகிருஷ்ண என்றபோதிலே – நீல
அலங்கார னாய் வருவான் கருடன் மீதிலே
சராசரங்கள் தாங்குகின்ற கண்ணன்பாதமே – பாடி
சரணடைந்துவாழ்பவருக்கில்லைஏதமே (நாரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நாராயணர்

**ராகம்: கல்யாணி** **தாளம்:ஆதி**

நாராய ணாயநம நாராய ணாயநம
நாராய ணாயநம நாராய ணாயநம

| | | | |
|---|---|---|---|
| அரிராம | வைகுந்த | நாராய | ணாயநம |
| அபிராம | அரங்கேச | நாராய | ணாயநம |
| திருமாது | திருமார்ப | நாராய | ணாயநம |
| செகமாது | மாணவாள | நாராய | ணாயநம |
| அருள்நேமி | சங்கேந்தும் | நாராய | ணாயநம |
| அடிமூன்று | மண்கேட்ட | நாராய | ணாயநம |
| இருள்மாயை | நீத்தருளும் | நாராய | ணாயநம |
| எருதேறு | ஜெயங்கொண்ட | நாராய | ணாயநம |
| நரசிங்க | வடிவான | நாராய | ணாயநம |
| நல்லாயர் | குலம்வந்த | நாராய | ணாயநம |
| குருகீதை | மறைசொன்ன | நாராய | ணாயநம |
| கோபால | கோவிந்த | நாராய | ணாயநம |
| காளிங்க | நடராச | நாராய | ணாயநம |
| கரிவேண்டும் | குரல்கேட்டு | நாராய | ணாயநம |
| நீளுங்கைச் | சாரங்க | நாராய | ணாயநம |
| தெகிழும்பஞ் | சவர்தூது | நாராய | ணாயநம |
| எந்தையே | கண்ணனே | நாராய | ணாயநம |
| எழுமேக | வண்ணனே | நாராய | ணாயநம |
| நந்தனின் | மைந்தனே | நாராய | ணாயநம |
| நம்மைவந் | தாண்டருள் | நாராய | ணாயநம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குன்னைத் தேடுவேன

**ராகம்: சகானா** **தாளம்: ரூபகம்**

எங்குன்னைத் தேடுவேன் கோவிந்தா – உன்னை
எப்படிப் பாடுவேன் கோவிந்தா
பொங்கர வப்பள்ளிக் கோவிந்தா – செல்வ
பூமகள் நாதனே கோவிந்தா

வஞ்சனை வாழ்விலே கோவிந்தா – மனம்
வருந்தித் தவிக்கிறேன் கோவிந்தா
தஞ்சம்சொல் வாரில்லைக் கோவிந்தா – உன்றன்
தாளினைக் கடைக்கலம் கோவிந்தா (எங்கு)

தேவகி மைந்தனே கோவிந்தா – இடைச்
சேரியின் காவலா கோவிந்தா
ஆவலுட னுன்னைக் கோவிந்தா – உன்னை
அலறிய ழைக்கிறேன் கோவிந்தா (எங்கு)

நரசிங்க மாகிய கோவிந்தா – எனக்கு
நல்வழி காட்டுவாய் கோவிந்தா
மரமேழு சாடிய கோவிந்தா – என்றன்
மனவாட்டம் தீராயோ கோவிந்தா (எங்கு)

நோயும் வறுமையும் கோவிந்தா – உயிர்
நோக வருத்துது கோவிந்தா
பேய்முலைப் பாலுண்ட கோவிந்தா – உன்றன்
பித்தனென னைக்கண்பார் கோவிந்தா (எங்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடனில் மேவிய கோவிந்தா - யமுனைக்
காளிங்க நர்த்தனக் கோவிந்தா
தருமவல் எடுத்துண்ட கோவிந்தா - உனக்குத்
தருவதற் கொன்றில்லைக் கோவிந்தா (எங்கு)

புல்லாங் குழல்கொண்ட கோவிந்தா - இந்தப்
புலையனைக் கண்பாராய் கோவிந்தா
கல்லாத மூடன்யான் கோவிந்தா - என்னைக்
கைதூக்கி காத்திடு கோவிந்தா (எங்கு)

ஆயிரம் ஆயிரம் கோவிந்தா - நீ
அவதாரம் எடுத்தாயே கோவிந்தா
மாயவனே ராமனே கோவிந்தா
மாயனேம ராமனே கோவிந்தா - சோதி
மதுரை மகாராஜக் கோவிந்தா (எங்கு)

வேங்கட வைகுந்தக் கோவிந்தா - மகா
விஷ்ணுவே கிருஷ்ணனே கோவிந்தா
பாங்குயர் பாங்கடற் கோவிந்தா - ஞானப்
பாஸ்கர நாரணக் கோவிந்தா (எங்கு)

பாதத்தைக் கைவிடேன் கோவிந்தா - என்னைப்
பராமுகம் செய்யாதே கோவிந்தா
ஆதிப் பெருமாளே கோவிந்தா
ஆதிப் பெருமாளே கோவிந்தா - உனக்
கடைக்கலம் வைத்துக்கொள் கோவிந்தா (எங்கு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுபாம்பே

**ராகம்: புன்னாகவராளி** **தாளம்: ஆதி**

ஆடுபாம்பே அசைந் தாடுபாம்பே - திரு
அரங்கேசன் கண்வரை ஆடுபாம்பே

கோடிகோடி அண்டங்கள் சுமப்பவன்நீ - மாயக்
கோவிந்தன் பள்ளிகொள்ளும் சயனமும் நீ (ஆடு)

காவிரியின் நீர்நடுவே வந்துகிடந்தான் - துணை
கருதிவந்த பாண்டவர்க்குத் தூதுநடந்தான்
மேவுமுல கெல்லாமீர் அடியிலளந்தான் - பெரு
வீரமிகு மிரணியனின் நெஞ்சுபிளந்தான் (ஆடு)

கண்ணனது கண்ணசைய ஆடுபாம்பே - செங்
கமலமலர்க் கையசைய ஆடுபாம்பே
தண்ணருட்பொன் மார்பசைய ஆடுபாம்பே - ஓடித்
தவழ்பாதச் சிலம்பசைய ஆடுபாம்பே (ஆடு)

திருமகளைத் துளபமணி மார்பிலேவைத்தான் - வரும்
செகமகளைத் தனதிடது பாகத்தில் வைத்தான்
பெருதிகிரி சங்குதண்டு வில்லுப்பிடித்தான் - கொடும்
பேய்மகளாம் பூதனையின் ஆவிகுடித்தான் (ஆடு)

மீன்பன்றி ஆமைதர சிங்கமாகினான் - புகழ்
வீரராமன் பலராமன் வாமனாகினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோன்பரசு ராமன்கண்ணன் கல்கியாகினான் - எண்ணிக்
குறிக்கவொண்ணா வடிவெடுத்தான் கோவிந்தக்கள்வன்

(ஆடு)

சீரடியார் கூப்பிடுமுன் தேடிவருவான் - கமலச்
செவ்வாயில் ஊதுகுழல் நாதம்புரிவான்
பாரதத்தேர் ஓட்டும்பார்த்த சாரதியானான் - அந்தப்
பாண்டவரின் பங்குக்கரு ணாநிதியானான் (ஆடு)

நாகேஸ்வர ரத்தமர்ந்த நாரணமூர்த்தி - அன்பர்
நாடுகுளிர் வரமளிக்கும் புண்ணியமூர்த்தி
மேகத்திலே கருடன்வந்தான் ஆடுபாம்பே - எங்கள்
வினைநீங்கிச் சுகம்மலர ஆடுபாம்பே (ஆடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருகன்

# சிவமுருகா

**ராகம் : மோகனம்** **தாளம் : ஆதி**

சிவமுருகா சிவமுருகா சிங்கார முருகா
தவமுருகா தமிழ்முருகா – சங்கீத முருகா

அண்டரெல்லாம் சூழும்செல்வச் சந்நிதி முருகா
கொண்டகவலை தீர்க்கும் மாவைச் சண்முக முருகா
தொண்டடியார் பாடும்நல்லைக் குருபர முருகா
கண்டுமனங் குளிர்கதிரை மலையுறை முருகா

சோதிதரும் சரவணத்தில் தோன்றிய முருகா
சுந்தரவே லாயுதத்தை ஏந்திய முருகா
ஆதிபரா சத்திதந்த அறுமுக முருகா
ஆறுபேரின் பால்குடித்த சரவண முருகா

சோதிதரும் சரவணத்தில் தோன்றிய முருகா
சுந்தரவே லாயுதத்தை ஏந்திய முருகா
ஆதிபரா சத்திதந்த அறுமுக முருகா
ஆறுபேரின் பால்குடித்த சரவண முருகா

பிரமாவைச் சிறையிட்ட பிரணவ முருகா
பேருலகம் காக்கவந்த காரண முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனாருக் குபதேசம் செய்திடும் முருகா
அடியார்க்குக் கருணைமழை பெய்திடும் முருகா

கந்தனெனப் பேர்படைத்த சுந்தர முருகா
கற்பகனாய் வந்தஆறு மந்திர முருகா
சிந்தனைத்தேன் பாயும்வேத சாத்திர முருகா
செந்தமிழின் வடிவான கார்த்திகை முருகா

மயிலேப் பழம்வாங்க வந்திடும் முருகா
மலையேறிப் பழஞானம் தந்திடும் முருகா
துயராலே வாடுகின்றோம் பார்த்திடு முருகா
சுடர்வேலால் தமிழினத்தைக் காத்திடு முருகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவடிச் சிந்து

## (அடிக்கீறிட்ட பகுதியை 2முறை பாடவும்)

## சண்முகசீலா

சண்முகசீலா சங்கரன் பாலா
சக்திப்பரம் பொருளே - முருகா
விண்மயில் வீரா சூரசங்காரா
வேதப் பழம் பொருளே - முருகா

சிந்திக்கும் அன்பர் சந்திக்கும் சந்நிதிக்
கந்தப் பரம் பொருளே - முருகா
செந்தமிழ்ச் செல்வம் மந்திரச் செல்வம்
தந்த பழம் பொருளே - முருகா

காவடிக் கந்தா மாவடிக் கந்தா
காவற் பரம்பொருளே - முருகா
நாவற் குமாரா சேவற் குமாரா
ஞானப் பழம் பொருளே - முருகா

கர்ப்பூரச் செல்வா கார்த்திகைச் செல்வா
கருணைப் பரம்பொருளே - முருகா
பர்ப்பதச் செல்விக் கற்பகம் தந்த
பாலப் பழம்பொருளே - முருகா

ஆடிவருவாய் ஓடிவருவாய்
ஆதிப் பரம்பொருளே - முருகா
காடுமணக்கும் கங்கைமணக்கும்
கதிரைப் பழம்பொருளே - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசக்கந்தா சல்லாபக்கந்தா
உண்மைப் பரம்பொருளே - முருகா
எல்லாமறிந்தாய் எங்கும் நிறைந்தாய்
இன்பப் பரம்பொருள் - முருகா

வள்ளிக் குறத்தி உள்ளத்தைக் கொள்ள
வந்தபரம் பொருளே - முருகா
வெள்ளிப் பொருப்பில் துள்ளிக் குதிக்கும்
வள்ளற் பழம்பொருளே - முருகா

சந்தனச் சோதி குங்குமச் சோதி
தங்கும் பரம்பொருளே - முருகா
சிந்தனைச் சோதி வந்தனைச் சோதி
சேர்ந்த பழம்பொருளே - முருகா

ஆறுமுகவா பன்னிரு கையா
அன்புப் பழம்பொருளே - முருகா
ஆறுபடைமேல் ஏறிநடக்கும்
அழகுப் பழம்பொருளே - முருகா

ஓம்சர வணபவ ஓம்சிவ குருபர
ஓம்கும ராயநம - முருகா
ஓம்சுச் பாஸ்கர ஓம்சச்சி தானந்த
ஓம்சிவ சுப்ரமண்யா - முருகா

கருணையங் கடலே கதிர்வடி வேலா
அருணைப் பரம்பொருளே - முருகா
சரணார விந்தம் - சஞ்சீவிமந்ரம்
தவவாழ்வும் தந்தருளே - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கொரு கதை சொல்லு

**ராகம் : சிவரஞ்சனி** **தாளம்: ஆதி**

கந்தா எனக்கொரு கதை சொல்லு
கவலை நீங்கிடும் வழி சொல்லு
செந்தா மரையாள் மருமகனே
சிவபூ ரணிதரு குரு குகனே (கந்)

சரவண பவனெனப் பாடி வந்தேன்
தாளிணை மலரைத் தேடிவந்தேன்
மருமலர் மாலை சூடவந்தேன்
வருமடி யாரொடு கூடவந்தேன் (கந்)

தேனார் கடம்பலர் அணிதோளா
சிற்பர நர்த்தன திருத்தாளா
வானோர் போற்றும் அருளாளா
வள்ளி குஞ்சரி மணவாளா (கந்)

கீரனுக் கருளிய புண்ணியனே
கிழவிக்குக் கனிதந்த கண்ணியனே
சூரனை மாய்த்த சுடர் வேலா
தோகையி லாடும் குணசீலா (கந்)

பழமாய் மலையில் நின்றவனே
பழந்தேன் செந்தினை தின்றவனே
பழம்பொ ளேமறைப் புதுப்பொருளே
பழவினை தீர்த்தெமை யாண்டருளே (கந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி
## சங்கரசிவ

**ராகம் : மோகம்** **தாளம் : ஆதி**

சங்கரசிவ ரூபாஞான வீரபத்திரசுவாமி
சத்திபத்ர காளிபாக வீரபத்திரசுவாமி
எங்கும்நிறை பரமேஸ்வர வீரபத்திரசுவாமி
எங்களைக்காத் தருள்புரிவாய் வீரபத்திரசுவாமி

தேங்குவை நெறிவளர்த்தாய் வீரபத்திரசுவாமி
செவ்வாய்நாள் கொலுவிருப்பாய் வீரபத்திரசுவாமி
ஓங்குமின்ப சோதி வண்ண வீரபத்திரசுவாமி
ஓங்காரத் துள்நடிப்பாய் வீரபத்திரசுவாமி

ஆதிவேத வாகமனே வீரபத்திரசுவாமி
அடியவரின் காவலனே வீரபத்திரசுவாமி
நாதவிந்து நடமிடுவாய் வீரபத்திரசுவாமி
நல்லவரின் நெஞ்சிருப்பாய் வீரபத்திரசுவாமி

தக்கயாக பூசையிலே வீரபத்திரசுவாமி
தலையறுத்துச் சமர்புரிவாய் வீரபத்திரசுவாமி
மிக்ககருணை மழைபொழிந்தாய் வீரபத்திரதசுவாமி
வெள்ளாட்டுத் தலை கொடுத்தாய் வீரபத்திரசுவாமி

சிவனிதயத் தெழுமகனே வீரபத்திரசுவாமி
திரிசூலம் வாள் பிடித்தாய் வீரபத்திரசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனையவ மதித்தவரை வீரத்திரசுவாமி

சிரபங்கம் செய்தாயே வீரபத்திரசுவாமி

தேவர்களைப் சிறைவைத்தாய் வீரபத்திரசுவாமி

திசையதிபர் கலங்கவைத்தாய் வீரபத்திரசுவாமி

சீவர்களைக் காக்க வந்தாய் வீரபத்திரசுவாமி

திருவடிக்கே சரண்புகுந்தோம் வீரபத்திரசுவாமி

இடபத்திலே வீற்றிருப்பாய் வீரபத்திரசுவாமி

இலிங்கபூசை நெறியுரைப்பாய் வீரபத்திரசுவாமி

கொடியபவப் பிணியறுப்பாய் வீரபத்திரசுவாமி

குறைவில்லா வாழ்வருள்வாய் வீரபத்திரசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவசுவாமி

## சூலமா நாயகன்

**ராகம்: மத்தியமாமதி** **தாளம் : திஸ்ர - ரூபகம்**

சூலமா நாயகன் வைரவப்பெருமான்
துட்டரை அழிப்பவன் வைரவப்பெருமான்
காலனின் காலன் வைரவப்பெருமான்
கருவினை ஒழிப்பான் வைரவப்பெருமான்

காளித்தா யுடனே வைரவப்பெருமான்
களிநடம் புரிவான் வைரவப்பெருமான்
சூழுலக மெல்லாம் வைரவப்பெருமான்
துணைநின் றாள்வான் வைரவப்பெருமான்

வேள்வியின் நாயகன் வைரவப்பெருமான்
வேதத்து நாயகன் வைரவப்பெருமான்
கோள்களை விதிப்பவன் வைரவப்பெருமான்
குலவிடு மாகமன் வைரவப்பெருமான்

உடுக்கிசைப் பிரியனார் வைரவப்பெருமான்
ஒளிர்பர சுடையவன் வைரவப்பெருமான்
சுடுத்திடு நடமிடும் வைரவப்பெருமான்
கபாலமொன் றுடையவன் வைரவப்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல வடிவினன் வைரவப்பெருமான்

பக்தரைக் காப்பவன் வைரவப்பெருமான்

சொற்பகங் கடந்தவன் வைரவப்பெருமான்

சுதந்திரக் கடவுளே வைரவப்பெருமான்

"நெய்வடை பாயாசம் பலவகை அமுது

நினைந்து படைத்தோம் நின்னடி தொழுது

ஐயனே எங்கணும் உன் குடியிருப்பு

அடைக்கலம் உனக்கே காப்பதுன் பொறுப்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிகரபுத்திரர்
## ஐயப்பா

**ராகம் : ரஞ்சனி** **தாளம் : ஆதி**

அரிகர புத்திர ஐயப்பா – உன்
அடியிணை தானே மெய்யப்பா
வருபுவி வாழ்க்கை பொய்யப்பா – உனை
மறவாத் திருவருள் செய்யப்பா

வான்சசி தேவி மனமேங்க – நீ
வந்தாய் அவள்முன் துயர் நீங்க
பான்மொழி பூரணை புட்கலையை – இரு
பாகத்தில் வைத்தாய் பரம்பொருளே. (அரி)

நீலப்பொன் மேனியும் செஞ்சடையும் – அருள்
நீள்கரத் தாயுதத்தொடுகெண்டும்
கோலம் படைத்த தவவடிவும் – புகழ்
கொண்டு பொலிந்தாய் உருத்திரனாய் (அரி)

முனைவான் வீரன் மாகாளன் – உடன்
முன்வரு காவற் படையாய்
நினைவால் வாக்கால் காயத்தால் – நாம்
நிகழ்த்திய பிழைபொறுத் தருள்வாய் (அரி)

மணிகண்டனாக அவதரித்தாய் – எங்கும்
வரிப்புலி ஏறி வலம் வந்தாய்
அணிகொண்ட சபரி மலையினிலே – சரத்
தாலயம் அமர்ந்த பெருமானே (அரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னை
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெம்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ எம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தேன்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தம் அழகியார் பாடாரோ நமசிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப்போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்னுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வயன்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
எனோர்க்குந் தங்கோனைப் பாடேலா ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ?
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொபம்பாய்ப் பணிசெய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ன வகையே எனக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகான்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வைகயெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாற் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீரத்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வர்த்தனையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தணையாள்
விண்ணோரைத்தாள் பணியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவம் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தொடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடிவின் மணித்தொகைவீ றற்றாற்போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை எனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கல்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நவகிரக தோத்திரம்

## காப்பு - வெண்பா

மண்ணுளுயிர்கட் கனைத்துமாறா தளித்துநல
நண்ணு நவக்கிரக நண்புசொல - தண்ணுலவு
திங்களணி தங்குமுயர் செஞ்சடையருண் மகிழ்செய்
கங்கையரு ளைங்கரனார் காப்பு.

## சூரிய பகவான்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திர பகவான்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போறி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## அங்காரகன் - செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலாதருள்வாய் குணமுடன்வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

## புத பகவான்

இதமுற வாழ இன்னல்கள்நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதந்தருந்தருாள்வாய் பண்ணொலியானே
உதவியே அருளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குரு பகவான்

குணமிகு வியாழக்குரு பகவானே!

மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்

ப்ரகஸ்பதி வியாழப்பர குருநேசா

க்ரஹ தோஷநீக்கி கடாஷித் தருள்வாய

### சுக்கிர பகவான்

சுக்கரமூர்த்தி சுபசுக மீவாய்

வக்கிரமின்றி வரமிகத் தருவாய்

வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே

அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

### சனி பகவான்

சங்கடந் தீர்ப்பாய் சனிபகவானே!

மங்களம் பொங்க

மனம் வைத்தருள்வாய்

சச்சரவின்றிச் சாகா நெறியில்

இச்செகம் வாழ இன்னருள் தா தா!

### ராகு பகவான்

அரவெனும் ராகு அய்யனே! போற்றி

கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி

ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி

ராகுக் கனியோ ரம்பியா போற்றி

### கேது பகவான்

கேதுத் தேவே கீர்த்தித் திருவே

பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்

வாதம் வம்பு வழங்குகள் இன்றி கேதுத்

தேவே கேண்மையாய் ரஷி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்
## தேவாரம்

வானமர் திங்களும் நீரும்
மருவிய வார் சடையானை
தேனமர் கொன்றை யினானைத்
தேவர் தொழப்படுவானை
கானம ரும்பிணை புல்கிக்
கலைபயிலுங் கடம் பூரில்
தானமர் கொள்கையினானை
தாள்தொழ வீடெளிதாமே —சம்பந்தர்

கள்வனேன் ஆனேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலும்
தெள்ளிய னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உன்ளெலா முருகிக் குரல் தழுத் தொழிந்தேன்
உடம் பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிருளளவும் பகலும் நான் அழைப்பேன்
நாராயணா என்னும் நாமம் — திருமங்கையாழ்வார்

## திருவாசகம்

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிடவேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பவளமால் வரையை பனிபடந்தனையதோர்

படரொளி தருதிரு நீறும்

குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்

துன்றுபொற் குழற்றிருச் சடையும்

திவள மாளிகை சூழ்திரு தில்லையுள்

திருநடனம் புரிகின்ற

தவள வண்ணனை நினைதொறும் என்மனம்

தழல் மெழு கொக்கின்றதே

– திருவாலியமுதனா

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்

சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்

சில்லாண்டிற் சிதையும் சில

தேவர் சிறுநெறி சேராமே

வில்லாண்ட கனகத்திரள்

மேருவிடங்கன் விடைப்பாகன்

பல்லாண் டேன்னும் பதங்கடந்

தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

–சேந்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்

– சேக்கிழார்

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே
காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான
தேனமுதைத் தருவாயே
மாயலனுக் கரியானே
மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே
நாககிரிப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா அஷ்டோத்ரம்

ஓம் தேவ்யை நம:
ஓம் துர்க்காயை நா:
ஓம் த்ரிபுவனேஸ்வர்யை நம:
ஓம் யஸோதாகர்ப்ப ஸம்பூதாயை நம:
ஓம் நாராயணவரப்பிரியாயை நம:
ஓம் நந்தகோபகுல ஜாதாகை நம:
ஓம் மங்கல்யாயை நம:
ஓம் குலவர்த்தின்யை நம:
ஓம் கம்ஸவித்ராவண கர்யை நம:
ஓம் அஸுரக்ஷ யம்கர்யை நம:
ஓம் ஸிலாதடனிநிக்ஷிப்தாயை நம:
ஓம் ஆகாஸகாமின்யை நம:
ஓம் வாஸுதேவ பகின்யை நம:
ஓம் திவ்யமால்யவிபூஷிதாயை நம:
ஓம் திவ்யாம்பரதராயை நம:
ஓம் கட்கசேடகதாரிவ்யை நம:
ஓம் ஸிவாயை நம:
ஓம் பாபஹாரிண்யை நம:
ஓம் வரதாயை நம:
ஓம் க்ருஷ்ணாயை நம:
ஓம் குமார்யய நம:
ஓம் ப்ரஹ்மசாரிண்யை நம:
ஓம் பாலார்க்கஸத்ருசாகாராயை நம:
ஓம் பூர்ணச்சந்த்ரநிபானனாயை நம:
ஓம் சதுர்ப்புஜாயை நம:
ஓம் சதுர்வக்த்ராயை நம:
ஓம் பீனஸ்ரோணிபயோ தராயை நம:

ஓம் மயூரபிச்சவலாயாயை நம: ஓம்
ஓம் கேயூராங்கததாரிண்யை நம:
ஓம் க்ருஷ்ணச்சவிஸாமாயை நம:
ஓம் க்ருஷ்ணாயை நம
ஓம் ஸங்கர்ஷணஸமானனாயை நம
ஓம் இந்த்ரத்வஜ ஸமபாஹு
ஓம் தாரிண்யை நம
ஓம் பாத்ர தாரிண்யை நம
ஓம் பங்கஜ தாரிண்யை ஓம்

ஓம் கண்டதாரிண்யை நம:
ஓம் பாஸதாரிண்யை நம:
ஓம் தனுர்த்தாரிண்யை நம:
ஓம் மஹாசக்கரதாரிண்யை நம:
ஓம் விவிதாயுததராயை நம:
ஓம் குண்டலபர்ணகர்ண
விபூஷிதாயை நம:
ஓம் சந்த்ரவிஸ்பர்தி
முகவிராஜிதாயை நம:
ஓம் முகுடவிராஜிதாயை நம:
ஓம் ஸ்பிச்சத்வஜ விராஜிதாயை நம:
ஓம் கௌமாரவரததராயை நம:
ஓம் த்ரிதிவ பாலயித்ரியை நம:
ஓம் த்ரைலோக்யரக்ஷ்ண்யை நம:
ஓம் மஹிஷாஸுரநாஸிண்யை நம:
ஓம் ப்ரஸன்னாயை நம:
ஓம் ஸுரஸன்னாயை நம:
ஓம் ஸுரஸ்ரேஸ்ட்டாயை நம:
ஓம் த்ரிதஸபூஜிதாயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக!"

"ஓம் ஸ்ரீ வரதகாளி அம்பாள் துணை"
சரவைண மேல்பால் பதியுறையும்



# ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபை

# SRI ARUL VARATHA KAALI AMBAL THEVASTHANA - BOARD OF TRUSTEE

WARD-02, SARAVANAI WEST, VELANAI

பதிவு இல. HA/5/JA/1059

ஏறக்குறைய 150வருடங்களுக்கு மேலாக இவ்வாலயம் அமைந்துள்ள காணியில் உள்ள வேம்பின் கீழ் அமர்ந்து அடியார்களுக்கு அருட்காட்சி கொடுத்து வந்தாள் எமது அன்னை, அருள் வரதகாளி அம்பாள். தொடர்ந்து வரும் காலங்களில் அடியவர்கள் ஆலயத்தில் வைகாசி விசாகத்தில் அன்று நாயக வழுந்து வைத்து தொடர் பொங்கல் பூசை வழிபாடுகள் நடைபெற்றது என்பது அடியவர்கள் வாயிலாக தெரிய வந்துள்ளது. அப்பொழுது பொங்கலிட்டு பூசை செய்யும் பொன்னடியார் முன்னிலையில் மங்களப் பெண் வடிவாகி வந்து நிற்பாள் பூரணி என்றும், அதுமட்டுமல்லாது திருநீற்றால் அருள் ஆட்சி வழங்கி பலநோய் தீர்த்து வந்துள்ளாள் எம் பராசக்தி அருள்வரதகாளியம்மா என்றும், கிழவியாய் வந்து ஒவ்வொரு இல்லங்களிலும் கேடுகள் வராமல் காத்தவள் எம் இறைவி என்றும், இறைவியின் அற்புதங்களை முதியோர் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாலயம் மீண்டும் 1988ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக யாவும் அழிந்த நிலையில் மீண்டும் 05.06.2002 அன்று உத்தராட்டாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. இங்கு பிள்ளையார், முருகன், வைரவர், சிங்கம், பலிபீடம், கொடித்தம்பப் பிள்ளையார் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மேலும் மடப்பள்ளி கட்டப்பட்டுள்ளது, சுற்றுமதில், வசந்தமண்டபம், யாகசாலை, மணிக்கூட்டுக் கோபுரம், என்பவற்றிற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று இடையில் கட்டப்படாமல் இருக்கின்றது. இங்கு தைப்பொங்கல், தைப்பூசம், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனித்திங்கள், சித்திரை வருடப்பிறப்பு, அபிராமிப் பட்டர்தினம், சித்திரைப்பூரணி, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், மணவாளக்கோலம், மாநோன்பு, திருவெம்பாவை போன்ற பூசைகள் நடைபெறுகின்றன. மேலும் ஆலயத்தின் வளர்ச்சி கருதி அன்பளிப்பு செய்ய விரும்பும் அடியார்கள் அன்பளிப்புச் செய்து அம்பாளின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பதிவிலக்கம்

HA/05/JA/1059



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

1) பிறந்து வந்தபோதுன்னைஅழுகையினால் தியானித்தேன்

2) பின் வளர்ந்த போதுன்னை புன்சிரிப்பால் தியானித்தேன்

3) விளையாடும் போதுகளில் மண்அளைந்து தியானித்தேன்

4) வித்தகங்கொள் பராயத்தில் புத்தகத்தால் தியானித்தேன்

5) மனையாளைக் காதலித்து வாலிபத்தில் தியானித்தேன்

6) இளமகவு உதிரத்துள் என்னுள் உனைத்தியானித்தேன்

எல்லாமே நீயாக இருக்கையில் சரணடைவதால் இந்நாளில் என் நாவில் எழுந்திடு தாயே.

1) பிறப்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பார் என இறைவன் பணித்தான்

2) இறப்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
இறந்து பார் என இறைவன் பணித்தான்

3) மனையாள் சுகமது யாதெனக் கேட்டேன்
மணந்து பார் என இறைவன் பணித்தான்

4) அனுபவித்தே தான் வாழ்வது வாழ்வெனில்
ஆண்டவனே நீ ஏனெனக் கேட்டேன்

5) ஆண்டவன் அருகே இறங்கி வந்து
அனுபவம் என்பது நான் தான் என்றான்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

ஐங்கரன் கணேசனுக்கு மங்களம் மங்களம்

அம்பலத்து நாதனுக்கு மங்களம் மங்களம்

சங்கரன் மனோன்மணிக்கு மங்களம் மங்களம்

சத்திவேலன் முருகனுக்கு மங்களம் மங்களம்

நாகவரத நாரணற்கு மங்களம் மங்களம்

நளினச் செல்வி இலட்சுமிக்கு மங்களம் மங்களம்

போகபுவன பூரணிக்கு மங்களம் மங்களம்

புனிதவீணை வாணித்தாய்க்கு மங்களம் மங்களம்

ஆதி வீரபத்திரர்க்கு மங்களம் மங்களம்

அரிகரபுத் திரபதிக்கு மங்களம் மங்களம்

சோதிஞான வைரவர்க்கு மங்களம் மங்களம்

துரியநந்தி சண்டேசற்கு மங்களம் மங்களம்

**சுபம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவோடு நன்றி நவில்கின்றோம்

ஆசியுரை, வாழ்த்துரை, கட்டுரை ஆகியன இந் நூலுக்கு வழங்கி கௌரவித்த நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களுக்கும், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள், ஆலய குரு சிவஸ்ரீ ந. கணேஸ்வரக் குருக்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க. மோகனதாஸ், முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்களுக்கும் ஆக்கங்களையும் பாடல்களையும் தொகுத்தவர்களுக்கும் அழகுற இப்புத்தகத்தை அச்சிட்டு தந்த கங்கை பிறின்டேஸினருக்கும், இவற்றிற்கும் மேலாக இந்நூலை அச்சேற்றி வெளியிடுவதற்கு நிதியுதவி செய்த பேரன்பர்களுக்கும் இந்நூலை வெளியீடு செய்து வைத்த அன்பர்களுக்கும் தேவியின் திருவருளினால் நன்றி கூறுகின்றோம்.

சுபம்


**ஆலய தர்மகர்த்தா சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோலமிகு சடையாடச் செவிகளாட
குமுதவா யாடமாங் கலநா ணாட
சீலமிகு கரமாடச் செம்பட்டாட
திரிசூலம் கலசம்வாள் குலிசமாட
ஞாலமிசை வருசிங்க மாடத் தண்டை
நவில் சிலம்புக் கழலாட விண்ணோராட
ஆலநிழந் சரவணையின் மேல்பால்மேவும்
அருள்வரத காளியம்மை ஆடீரூஞ்சல்"



கங்கை பிறின்டேர்ஸ் 781, சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். றோட், யாழ்
T.P: 0776184567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org